Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 20 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 20 (06.10.2004) புதன்கிழமை இதழ்: 06

இன்றைய நாகரிகம்! நாளைய நாகரிகம்!

மகாராசி சில்க்ஸ்

சகல நிகழ்வுகளுக்கும் மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P No - 0777286247

(c-2203)

# சமாதான முன்னெடுப்புகளில் புலிகள் சளைக்காமல் தொடர்ந்து ஈடுபடுவர்!

## ஹெல்கிசனுடனான சந்திப்பில் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

(ஜெனீவா)

**இலங்கை அரசாங்கம் சமாதான நடவடிக்கைகளை முடக்கிவைத்திருக்கின்ற சூழலில் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லாத போதிலும் புலிகள் அதில் தொடர்ந்து ஈடுபாடு காட்டுவர் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனிடம் தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினருக்கும், நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளாக அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், தமிழீழ காவல்துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)



# யுவதியுடன் சேட்டைவிட்ட வர்த்தகரின் கடை நாசம்!

## வவுனியா நகரில் நேற்றுமாலை சம்பவம்

(வவுனியா)

யுவதி ஒருவருடன் தகாத முறையில் ... நகரப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றித்தெரியவருவதாவது -

# தடுப்புக்காவலில் இருப்பவர்களை விடுவிக்கக் கோருவது முறையல்ல!

## போர்நிறுத்த கண்காணிப்புக்குழு கூறுகிறது

(கொழும்பு)

ஒரு தரப்பினரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்காக மறுதரப்பின்

திருகோணமலையில் விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரின் விடுதலை தொடர்பாக போர்

பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், தமிழீழ காவல்துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# யுவதியுடன் சேட்டைவிட்ட வர்த்தகரின் கடை நாசம்!

## வவுனியா நகரில் நேற்றுமாலை சம்பவம்

(வவுனியா)

யுவதி ஒருவருடன் தகாத முறையில் நடந்துகொள்ள முற்பட்ட முஸ்லீம் வர்த்தகர் ஒருவரது புடவை விற்பனை நிலையம் பொதுமக்களால் தாக்கிச் சேதப்படுத்தப்பட்டது.

நேற்று இரவு 7.30 மணிக்கு வவுனியா நகரப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றித்தெரியவருவதாவது -

வவுனியா நகரின் ஹொறப்பொத்தானைப் பகுதியில் உள்ள முஸ்லீம் வர்த்தகர் ஒருவரது புடவை விற்பனை நிலையத்துக்கு நேற்று மாலை 4.30 மணியளவில் யுவதி ஒருவர் புடவை கொள்வனவு செய்யச் சென்றிருந்தார்.

குறிப்பிட்டநேரம் விற்பனை நிலையத்தில் வேறு எவரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உரிமையாளர் குறிப்பிட்ட யுவதியுடன் தகாத முறையில் நடந்து கொள்ள முற்பட்டார்.

இந்தவிடயம் தொடர்பாக குறிப்பிட்ட யுவதி தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரிடமும், தனது உறவினர் களிடமும் முறையிட்டுள்ளார்.

இதனை அடுத்து யுவதியின் உறவினர் ஒருவர் குறிப்பிட்ட வர்த்தக நிலையத்துக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)

### செஞ்சிலுவை பிரதிநிதிகளுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!

(ஜெனீவா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனுக்கும் ஆசிய பிராந்தியத்திற்கான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று சுவிற்சர்லாந்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது மனித உரிமை பேணல் உட்படப் பல்வேறு விடயங்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# தடுப்புக்காவலில் இருப்பவர்களை விடுவிக்கக் கோருவது முறையல்ல!

## போர்நிறுத்த கண்காணிப்புக்குழு கூறுகிறது

(கொழும்பு)

ஒரு தரப்பினரால் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களை விடுவிப்பதற்காக மறுதரப்பின் தடுப்புக்காவலில் இருப்பவர்களை விடுவிக்க வேண்டுமெனக் கோருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

திருகோணமலையில் விடுதலைப் புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரின் விடுதலை தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு நேற்று வீடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவம் - புலிகள் சந்திப்பு திட்டமிட்டபடி இன்று நடைபெறும்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவ அதிகாரிகளுக்கு மிடையிலான நல்லெண்ண சந்திப்பு ஏற்கனவே தீர்மானித்தபடி இன்று நடைபெறவுள்ளது.

வவுணதீவு யுத்த சூனியப்பிரதேசத்தில் இந்தச் சந்திப்பு இன்று காலை10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி இடம்பெற்ற இருதரப்புச் சந்திப்பில் - மாதத்தில் இரு தடவை இத்தகைய சந்திப்புக்களை நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாளை நடைபெறவேண்டிய சந்திப்பு விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிற்போடப்பட்டுள்ளதாக ஏற்கனவே போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பன்னிரு வேங்கைகள் நினைவுநாள் நிகழ்வுகள் தீருவில் திடலில்!



குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவுநாள் பிரதானநிகழ்வு நேற்று தீருவில் திடலில் நடைபெற்றது. வல்வெட்டித்துறை - மருதடிச்சந்தியிலிருந்து பாண்ட் வாத்தியங்கள், மங்கல வாத்தியங்கள் சகிதம் 12 வேங்கைகளினதும் திருவுருவப் படங்களைப் பெண் போராளிகள் தாங்கிவர, அவர்களைத் தொடர்ந்து பன்னிரு வேங்கைகளின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் போராளிகள், பொதுமக்கள் எனப்பலர் ஊர்வலமாக தீருவில் நினைவுத்தூபிக்குச் சென்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

### ஒமடியாமடுவில் குடும்பஸ்தர் கருணா குழுவால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப் பிரதேசத்திலுள்ள ஒமடியாமடு கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் வண்ணமணி தர்மராஜா (வயது 40) நேற்று முன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு-பொலனறுவ மாவட்ட எல்லைக் கிராமமான ஒமடியாமடுவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்துக்கு கருணா குழுவே காரணமாக இருக்கலாம் என அந் (12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் நாட்டரிசி (புழுங்கல்) வழங்கலுக்கான கேள்வி கோரல்

1) யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004, ஜூன், ஜீலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ப.நோ.கூ. சங்கங்களிடமிருந்து கீழக்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென கீழ்த்தரப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து கோரப் படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கத்திற்கும் வழங்கீடு செய்யப்படவேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை பின்னர் அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு | | |
|---|---|---|---|---|
| | | யூன் (MT) | யூலை (MT) | ஓகஸ்ட் (MT) |
| 01 | சாவகச்சேரி | 190 | 190 | 190 |
| 02 | கைதடி | 70 | 70 | 70 |
| 03 | கொடிகாமம் | 135 | 135 | 135 |
| 04 | உடுப்பிட்டி | 32 | 32 | 32 |
| 05 | கட்டைவேலி - நெல்லியடி | 45 | 45 | 45 |
| 06 | பருத்தித்துறை | 114 | 114 | 114 |
| 07 | புலோலி | 27 | 27 | 27 |
| 08 | மருதங்கேணி | 80 | 80 | 80 |
| 09 | யாழ்ப்பாணம் | 311 | 311 | 311 |
| 10 | நல்லூர் | 161 | 161 | 161 |
| 11 | அச்சுவேலி | 154 | 154 | 154 |
| 12 | நீர்வேலி | 115 | 115 | 115 |
| 13 | மானிப்பாய் | 131 | 131 | 131 |
| 14 | பண்டத்தரிப்பு | 90 | 90 | 90 |
| 15 | அளவெட்டி - மல்லாகம் | 64 | 64 | 64 |
| 16 | தெல்லிப்பளை | 150 | 150 | 150 |
| 17 | சங்கானை | 183 | 183 | 183 |
| 18 | சுன்னாகம் | 196 | 196 | 196 |
| 19 | புங்குடுதீவு - நயினாதீவு | 40 | 40 | 40 |
| 20 | வேலணை | 45 | 45 | 45 |
| 21 | ஊர்காவற்றுறை | 70 | 70 | 70 |
| 22 | காரைநகர் | 55 | 55 | 55 |
| 23 | தீவகம் | 12 | 12 | 12 |
| 24 | நெடுந்தீவு | 30 | 30 | 30 |
| | மொத்தம் | 2500 | 2500 | 2500 |

2) கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500/= ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி, கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.10.06 திகதி தொடக்கம் 2004.10.21 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ் வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ.சங்கங்களை பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

3) மீளளிக்க முடியாத கேள்வி வைப்புக்களாக ரூபா 500/= ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப் படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

4) கேள்வி கோரப்படவுள்ள அரிசி நாட்டரிசியாக (புழுங்கல்) இருத்தல் வேண்டும் என்பது அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கொண்டிருத்தல் கட்டாய மானதாகும்.

5) பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2004.10.22 பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப.3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

6) கேள்வி பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி என எழுதப்படல் வேண்டும்.

7) கேள்வி காரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்றுக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளை சமர்ப்பிப்பதற்கும் அச்சங்கங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் விநியோகிக்கப்படவேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

8) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விகாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுத்தல் முறிக்காக (Performance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

9) கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது, சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்துக்கான விலை மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும் அதிகமாக இருததல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும் பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக்காரணம் கொண்டும் அதிகமாக இருக்க மாட்டாது.

10) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
தலைவர்/அரச அதிபர்,
மாவட்ட கேள்விச் சபை/மாவட்ட செயலகம்
யாழ்ப்பாணம்.
05.10.2004

(சி-3199)

# கல்வி மேம்பாட்டு பேரவையின் ஆசிரியர் தின வாழ்த்துச்செய்தி

இன்று சர்வதேச ஆசிரியர் தினம். இன்று எமது ஆசிரியர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதில் கல்வி மேம் பாட்டுப்பேரவை மகிழ்வடைகிறது. உண்மையில் ஆசிரியர்கள் இன்றைய தினத்தில் மட்டும் பாராட்டுக்குரியவரல்லர். மாணவர்களின் நலனுக்காக தம்மை அர்ப்பணித்து சேவை மனப்பான்மையுடன் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் என்றென்றும் தெய்வமாக போற்றப்படவேண்டியவர்கள். இவ்வாறு யாழ்.மாவட்ட கல்விமேம்பாட்டு பேரவை ஆசிரியர் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப் பட்டது. அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்ப்பாணக் கல்வி வரலாறு ஒருகால கட்டத்தில் இலங்கையில் மட்டுமல்லாமல் சர்வதேசத்திலும் பெருமையுடள் பேசப்பட்டு புகழப் பட்டு வந்தமை யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழக அனுமதியில் பெரும் எண்ணிக்கையை கொண்டிருந்தவர்கள் யாழ்ப்பாண மாணவர்கள். இத்தகைய பெருமைக்கு வித்திட்டவர்கள் எமது ஆசிரியர்களே. இதனைக்கண்டு பொறுக்காத பேரினவாத அரசு தமிழ் மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தும் நிகழ்வாக தரப்படுத்தலைக்கொண்டு வந்து யாழ்ப்பாணக் கல்வியை சிதைவடையச் செய்தது. அதுமட்டுமன்றி கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றபோரும் இடப்பெயர்வும், புலப்பெயரும் எமது கல்வியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தின. இந்த நிலையில் இருந்து விடுபட்டு மீண்டு எமது கல்வித்தரத்தினை உயர்த்துவதற்கு கல்வி நிர்வாகமும், ஆசிரிய உலகமும் ஆழமாகச் சிந்தித்து கல்வியை முன்னெடுக்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.

இந்த முன்னெடுப்பிற்கு யாழ்ப்பாண மண்ணில் இன்று சவாலாக காணப்படும் விடயங்களை இங்கு குறிப்பிடவேண்டும். அதில் ஒன்று சமூககலாசார விழுமியங்களில் ஏற்பட்டுள்ள பிறழ்வு மாணவ உலகத்தை பாதித்து அவர்களின் நடத்தைக் கோலங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. மற்றயது பள்ளி மாணவர்களின் கல்விக்கான பொறுப்பை ஆசிரியர்கள் முழுதாக பொறுப்பேற்றிருந்த நிலைமாறி தனியார் கல்விநிறுவனமும் இணைந்து நிற்பதனால் மாணவர்கள் தமது கற்றல் நேரத்தை வீணடிக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

எமது மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் அண்மைக்காலங்களில் வீழ்ச்சியடைந்துள்ளது என்ற பேச்சு காதுகளில் அடிபடுவதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய தொன்றாகும். கல்வி எமது சொத்து என்ற பெரு நம்பிக்கையுடன் வாழ்பவர்கள் யாழ்ப்பாண மக்கள். இவற்றுக்கெல்லாம் வழிசமைக்க வேண்டியவர்கள் அர்ப்பணிப்புடன் சேவை யாற்றுகின்ற எமது ஆசிரியர்களே. அந்த வழியில் மீண்டும் ஆசிரியர்கள் நடக்க ஆரம்பித்து விட்டார்கள். என்பதை அண்மைக்காலப் பொதுப்பரீட்சை முடிவுகள் எமக்கு நமபிக்கையை ஊட்டுகின்றன. சான்று பகிர்கின்றன. இந்த வெற்றிப் பாதையில் ஆசிரியர்களை வீறு நடைபோடச் செய்வதற்கு யாழ்ப் பாணக் கல்விமேம்பாட்டு பேரவை என்றும் உறுதுணையாக நிற்கும்.

# வட மாகாண அதிபர் சங்கத்தின் உலக ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

கல்விசார் மாற்றங்களுக்கான பிரதான முகவர்கள் ஆசிரியர்களேயாவர். விரைந்து மாறிவரும் உலகநிலைவரங்களை விரைவாக உள்வாங்கி அவற்றிற்கிசைவான வெளிப்பாடுகளைக் கல்விப்புலத்தில் பிரகாசிக்கச் செய்யும் மகத்தான பணி ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் மகிழ்ச்சிகரமான வாழ்வளிக்கக் கூடிய கல்வியை மாணவர்களுக்கு வழங்கிச் சமூகத்திற்கு வழிகாட்டிகளாகத் திகழவேண்டியவர்கள் ஆசிரியர்களே ஆவர். விரைவுப்பண்புடைய பரந்த தொடர்பாடல் வசதிகளால் சுருங்கி நெருக்கமடைந்துள்ள இன்றைய உலகில் பெருகி வரும் தேவைகளுக்கமைவாக மாற்றமடைந்து பெருகிவரும் கல்வித் தேவைகளை களநிலையில் நிறைவுசெய்வதற்கான ஆற்றலும் திறனும் இன்றைய ஆசிரியர்களிடம் கட்டாயமாக எதிர்பார்க்கப்படுகின்றன.

கல்வியமைப்புமுறை மற்றும் கல்வி வழங்குநிலை என்பவற்றின் குறைபாடுகளால் ஏற்படும் கல்வி இழப்புக்களுக்கு சமூகம் ஒட்டு மொத்தமாக ஆசிரியர்களையே குறைகூற முற்படுகின்றது. மறுபுறத்தில் இவற்றைச் சடுதியாக ஈடு செய்யமுடியாத இயலாமைப் பண்புகளால் ஆசிரியர்களும் இன்னலுறுகின்றனர். இவை யாவும் ஆசிரியத்துவத்தினை மாசுபடுத்தும் சந்தர்ப்பங்களை உருவாக்கிவிடுகின்றன.

ஆசிரியர்கள் தம்மிடம் குறைவு கண்டுள்ள ஆசிரியப்பண்புகளை நிறைவாக்கி மேன்மையடையவும் சமூகம் ஆசிரியர்களுக்குரிய கௌரவத்தினையும் முதன்மைநிலையினையும் வழங்கி நாகரிகப்பண்புடன் நன்மையடையவும் உலக ஆசிரிய தினமான இந்நன்நாளில் வடமாகாண அதிபர்கள் சங்கத்தினராகிய நாம் மனமாரவாழ்த்துகிறோம்.

# வலி.தென்மேற்கு பிரதேசசபை முன்பள்ளி ஆசிரியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

வலிதென்மேற்கு பிரதேசசபையின் முன்பள்ளி ஆசிரியர் தின விழா இன்றுகாலை 8.45 மணிக்கு வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

பொதுச் சேவைப் பங்காளர் ஜே.செல்வராசா தலைமையில் இடம்பெற உள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ் .சதாசிவம் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் எஸ்.ஜெயராஜ், வலி.தென் மேற்கு பிரதேசசபை செயலர் எஸ் விக்டர் ஆகியோரும்,

சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அன்பாளன், சுதேச மருத்துவத்துறை முன்னாள் மாகாணப் பணிப்பாளர் பி. உரோமகேஸ்வரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் கந்தசாமி, வலிகாமம் வலய முறைசாராப் பிரிவின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவநேயன், வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் க.அரசரட்ணம், வடலியடைப்பு நலன்புரிச் சங்கப் பொருளாளர் கே.கந்தசாமி, மானிப்பாய் ப.நோ.கூ.சங்க முன்னாள் உபதலைவர் க.பஞ்சலிங்கம், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளின் போது 25 வருட சேவையைப் புரிந்த யாழ். மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களும் மற்றும் இணைப்பாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ராஜா யாழ்ப்பாணம்.
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த

அரசாட்சி
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30, (பு.நே)
(சி-2725)

நிறஞ்சனாஸ் சங்கானை
அப்பாஸ், நந்திதா நடித்த
சிந்தாமல் சிதறாமல்
தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)
MEET THE PARENTS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
(சி-2723)

## எம்.பிக்களின் ஓய்வூதியத்தை நிறுத்தும் பிரேரணைக்கு ஹெல உறுமய ஆதரவு!

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்து வருடங்கள் கடமையாற்றிய வர்களுக்கு வழங்கப்பட்டுவரும் இளைப்பாற்றுச் சம்பளத்தை ரத்துச் செய்ய வேண்டுமென அரசாங்கத்திடம் ஜே.வி.பி சமர்ப் பித்துள்ள பிரேரணைக்கு - ஜாதிக ஹெல உறுமய தமது ஆதர வைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் தலைவரும், களுத் துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வண. எல்லா வல மேதானந்த தேரர் தெரிவித் துள்ளதாவது -

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து வருடம் தமது சேவையை நிறைவு செய்தால் ஓய்வூதியத் தைப் பெறலாம். ஆனால் அர சாங்க ஊழியர்கள் ஓய்வூதியத் தைப் பெறுவதற்கு 55 வயதுவரை பணிபுரிய வேண்டும்.

எனவே, இந்த நடைமுறை யானது ஒரு நேர்மையற்ற செயற் பாடாகும். இந்த எண்ணத்தை ஹெல உறுமய கொண்டிருந்த போதும், ஜே.வி.பினர் எமக்கு முன் னர் இந்தப் பிரேரணையை முன் வைத்துள்ளனர் எனவும் அவர் தெரி வித்தார்.

# சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதை தேசிய ஆலோசனை சபை தாமதப்படுத்தும்!

## ஜனாதிபதிக்கு சம்பந்தன் கடிதம்



(திருகோணமலை)

அர்த்தமுள்ள விதத்தில் சமா தான முறையை மீண்டும் ஆரம் பிப்பதை - தேசிய ஆலோசனைச் சபை தாமதப்படுத்துமெனக் கருது வதால், இந்தக் கூட்டத்தில் தாம் பங்கேற்கவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதி சந்தி ரிகாவுக்கு நேற்று முன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் விபரம் வரு மாறு -

இலங்கை தமிழரசுக் கட்சியின் பெயரால் தெரிவு செய்யப்பட்ட 22 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டதும், அதன் பங்காளிக் கட்சிகள் அங்கம் வகிப்பதுமான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக்கூட்டம் - செப்ரெம்பர் 22 ஆம் திகதி கூடி, தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு பங்கு பற்றாது என்று ஏக மனதாகத் தீர்மானித்தது.

ஜூன் பத்தாம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுவை நீங்கள் சந்தித்துப் பேசியபோது, இடைக்காலத் தன் னாட்சி அதிகாரசபை முன்மொழிவு கள் மீதான பேச்சுவார்த்தையை யும், இறுதித் தீர்வுதொடர்பான மையப் பிரச்சினைகளையும் சேர்த்து ஆரம்பிப்பது என்றும் அந்தப் பேச்சு வார்த்தையின்போது - கூடுதலான நேரத்தை இடைக்காலத் தன் னாட்சி அதிகாரசபை முன்மொழிவு கள் தொடர்பாக ஒதுக்குவது என் றும், குறைந்தளவு நேரத்தை மையப் பிரச்சினைகளுக்கு ஒதுக்குவதென் றும் ஆரம்பத்தில் தீர்மானித்திருப்ப தாகக் கூறினீர்கள்.

பின்னர் விட்டுக்கொடுத்து இடைக காலத்தன்னாட்சி அதிகார சபை யின் முன்மொழிவுகளின் சில அம் சங்களை ஏற்காதுவிட்டாலும், அந்த முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற் குத் தயாராக இருப்பதாகவும், நீங் கள் அந்தச் சந்திப்பின்போது - மிகத்தெளிவாகத் தெரிவித்திருக் கிறீர்கள்.

இடைக்காலத் தன்னாட்சி அதி காரசபை முன்மொழிவுகள் தொடர் பாக விடுதலைப் புலிகளுடன் ஒரு ஒழுங்குக்கு வந்த பின்னர் நீங்கள் எடுக்கவிருக்கும் உத்தேச நட வடிக்கை பற்றியும் சுருக்கமாக அப் போது விபரித்திருக்கிறீர்கள்.

ஜூன் 10 ஆம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுவிடம் தெளிவாகக் கூறிய கொள்கையை, நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஜனநாயகத் தமிழ் அரசியற் தலைமைத்துவத்துக்கு தாம் வழங் கிய உறுதிப்பாடுகளை சிங்கள அரசியற்தலைமைத்துவம் கௌர விக்கத் தவறியதே தற்போதைய மோதலுக்கான முக்கிய காரண மாகும்.

ஜூன் மாதம் 10 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவுக்கு அளித்த உறுதிமொழியிலிருந்து நீங்கள் பின் நோக்கிச் செல்வதற்கு நாங் கள் உதவமுடியாது என்பதே எங்களின் அபிப்பிராயமாகும்.

தாம் '31.10.2003 சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகள் மீதான பேச்சுவார்த்தை ஆரம்பமான பின் னர், இடைக்கால சுயாட்சி அமைப்பு தொடர்பாக அரசாங்கம் பேச்சு வார்த்தையில் சமர்ப்பிக்கும் விட யங்களையும் பரிசீலனைக்கு எடுத் துக்கொள்ள முடியுமென்றும், அவ் வாறான பேச்சுவார்த்தை ஆவலு டன் எதிர்பார்த்திருப்பதாகவும் விடுதலைப்புலிகள் - நோர்வேயின் அனுசரணையாளர்களுக்குத் தெரி வித்திருக்கின்றனர்.

ஜே.வி.பியும் நாடாளுமன்றத் தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள ஜாதிக ஹெல உறுமயவும், இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் மீது பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதை கடுமையாக எதிர்க்கின்றன.

இது உத்தேச தேசிய ஆலோ சனைச் சபையின் செயற்பாட்டை பயனற்றதாக்குவதில் முடியும் என் பது தவிர்க்க முடியாததாகும். அர்த்தமுள்ள விதத்தில் சமாதான நடைமுறையை மீண்டும் ஆரம் பிப்பதை இது தாமதப்படுத்தும்.

அரசாங்கம் இதுவரை தவறி யது போலன்றி பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தெளிவா னதும், துணிகரமானதுமான நட வடிக்கையை அரசாங்கம் மேற் கொண்டால் மட்டுமே சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்ல முடியும் என்பது எமது தீர்க்கமான கருத்தாகும்.

எமது அபிப்பிராயப்படி அவ்வா றான ஒரு நிலைப்பாடு நாடாளு மன்றத்துக்குள்ளேயும், நாட்டிலும் மிகக் கூடுதலான அளவு ஆதர வைப் பெறும்.

ஜூன் 10 ஆம் திகதி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்றக்குழுவிடம் நீங்கள் தெளி வாகத் தெரிவித்த நிலைப்பாட்டை நடைமுறைப்படுத்தும்படி தங்களை பணிவாக வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் மேற் கூறப்பட்ட தேசிய ஆலோசனை சபைக் கூட்டங்களில் நாங்கள் கலந்து கொள்ளமாட்டோம் என தனது கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்

## வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் விரைவில் நடவடிக்கை!

### அமைச்சர் ரட்ணசிறி தகவல்!



(கொழும்பு)

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வுள்ளதாக மக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

டொன் பிறற்றிக் கல்லூரியில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற பண்டாரநாயக்க ஞாபகார்த்த சாகித்திய விழாவில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்த அவர் - எமது அரசாங்கம் தற்பொழுது பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் முகமாக தேசிய உற்பத்திக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், உள்ளூர் விவ சாயிகளைப் பாதிக்காத வகையிலும் பொருட்களின் விலைகளை குறைக்கத் தீர்மானித்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

# வட்டமடு காணிப் பிரச்சினைகள்; முத்தரப்பு சந்திப்பில் ஆராய்வு!

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டம் - திருக் கோவில் வட்டமடு விவசாயக் கண் டத்தில் முஸ்லிம் விவசாயிகள் விவசாயச் செய்கையில் ஈடுபடுவது தொடர்பாக எழுந்துள்ள பிரச் சினைக்குத் தீர்வு காணும் நோக் கில் அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் முத்தரப்பு சந்திப் பொன்று இடம்பெற்றது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலி கள், முஸ்லிம் பிரதிநிதிகள் மற்றும் சிவில் அதிகாரிகள் ஆகியோர் பங்குபற்றினர்.

வட்டமடு பிரதேசத்தில் போர் நிறுத்த உடன்படிக்கையின் பின்பு இரண்டு போகங்களில் முஸ்லிம் விவசாயிகள், விவசாயச் செய்கை யில் ஈடுபட அனுமதிக்கப்பட்டதை நினைவு படுத்திய முஸ்லிம் தரப் பினர், எதிர்வரும் போகத்திலும் இதற்கு அனுமதிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

காணி உறுதி மற்றும் அதற் கான அனுமதிப்பத்திரங்களும் தங்களிடம் இருப்பதால், எவ்வித தங்கு தடையுமின்றி தாங்கள் விவசாயச் செய்கையில் ஈடுபட அனுமதிக்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் தரப்பினரின் இந்தக் கோரிக்கையை நிராகரிக் கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.பத்மநாதன் பதில ளித்தார்.

சம்பந்தப்பட்ட காணி - மேய்ச் சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட காணி எனத் தெரிவித்த அவர், தமிழர் தரப்பு நியாயத்தை முன் வைத்தார். இருப்பினும் இருதரப்பினரும் இந்தக் காணி விடயத்தில் தீர்க்க மான முடிவொன்றை எடுப்பதற்கு இணக்கம் கண்டனர்.

எதிர்வரும் சனிக்கிழமை மாகாண காணி ஆணையாளர் வர வழைக்கபட்டு, காணி உரிமை யாளர்களை அடையாளம் காண் பது என்றும், அடையாளம் காணப் பட்ட காணி உரிமையாளர்களை விவசாயச் செய்கையில் ஈடுபட அனுமதிப்பது என்றும் முடிவெடுக் கப்பட்டது.

அன்றைய தினம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஹேரத் அபயவிக்கிரம தலைமையில் - இது தொடர்பாக நடைபெறும் கூட்டத்தில் அம்பாறை மாவட்டத் தைச் சேர்ந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத் தல்,

விடுதலைப் புலிகள், விவசாயி கள், கால்நடை வளர்ப்போர், பள்ளி வாசல் சம்மேளனம் ஆகிய தரப் பினர் சார்பில் தலா 3 பிரதிநிதிகள் அன்றைய தினம் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதித்தல் போன்ற தீர்மானங்களும் எடுக்கப் பட்டன.

அம்பாறை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தலைமையில் - விடுதலைப் புலி களின் பிரதிநிதிகளும், அக்கரைப் பற்று சமாதான சபை தலைவர் டொக்டர் அப்துல் ஜவ்பர் தலை மையில் முஸ்லிம் பிரதிநிதிகளும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண் டார்கள்.

## வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல் மேலும் ஆறு மாதங்கள் ஒத்திவைப்பு!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, வடக்கு - கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடி, இந்தத் தீர்மானத்தை எடுத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் இயல்பற்ற சூழல் நிலவுவதால் - தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதாலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் 23 ஆம் திகதி இந்தத் தேர்தலை நடத்த, முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், ஆறு மாதங்களுக்கு இது ஒத்தி வைக்கப்பட்டு அடுத்த வருடம் ஏப்ரல் 23 ஆம் திகதி தேர்தல் நடத்துவது என இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (01)

### ஐ.தே.க ஆட்சியில்

## நியமனம் பெற்ற ஊழியர்கள் பதவி நீக்கப்படுகின்றனர்

### நாடாளுமன்ற உறுப்பினர் லொக்குகே குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நியமனம்பெற்ற உத்தியோகத்தர்களது பதவிகளைப் பறிக்க, ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் திட்டமிட்டுள் ளது என, ஐக்கியதேசியக்கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினிலொக்குகே தெரிவித்தார்.

தனது இல்லத்தில் அவர் நடத் திய ஊடகவியலாளர் சந்திப்பி லேயே அவர் இவ்வாறு தெரிவித் தார். அவர் அங்கு மேலும் தெரி வித்ததாவது -

இதுவரை ஆயிரத்துக்கும் அதிக மான ஊழியர்கள் வேலையிலி ருந்து நீக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பதவி நீக்கப்படுவதற்கு பல கார ணங்கள் கூறப்படுகின்ற போதிலும், அவர்கள் ஐக்கிய தேசிய முன் னணி அரசாங்கம் ஆட்சியிலிருந்த போது நியமனம்பெற்றமையே உண்மையான காரணமாகும்.

வாழ்க்கைச்செலவு அதிகரிக் கும்போது நாம் எதிர்ப்பைத்தெரி வித்தோம். இந்த எதிர்ப்பு நட வடிக்கைக்கு முகம்கொடுத்துப் பிரச்சினையைத் தீர்த்துவைக்காத அரசாங்கம் - ஐக்கியதேசியக் கட் சியின் தொழிற்சங்க உறுப்பினர்க ளையும் கடந்த அரசாங்கத்தால் நியமனம்பெற்ற ஊழியர்களையும் பதவிநீக்கம் செய்யும் பணியிலும் தற்போது அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. பட்டதாரிகளுக்கு அரச துறை நியமனம் வழங்கப்பட்டுவரு கின்றபோதும் அதற்கு அதிகமான தொகையினர் பதவியிலிருந்து நீககப்பட்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

### கொலை அச்சுறுத்தலால்

## பரிசளிப்பு நிகழ்வில் எம்.பிக்கள் பங்கேற்கவில்லை!

(மட்டக்களப்பு)

ஆயுதக் குழுவொன்றால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக- மட்டக்களப்பு கிரான் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் அதிபர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது, மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கி கௌரவித்தார்.

இந்த மகாவித்தியாலய பழைய மாணவனும், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.ஜெயானந்தமூர்த்தி பிரதம அதிதியாகவும், ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், த.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் அழைக்கப்பட்டிருந்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்திக்கு - இந்த நிகழ்வில் கலந்துகொண்டால் கொலை செய்யப்படு வாய் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே அவ ரும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை.

தங்கேஸ்வரி கதிர்காமர் தற்போது இந்தியாவில் தங்கியிருக்கின்றார். ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் மட்டக்களப்பில் தற்போது தங்கியிருக்கின்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்ரேலிய - இந்திய அணிகளிடையே முதல் டெஸ்ட் இன்று ஆரம்பமாகின்றது!

இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அவுஸ்ரேலிய அணி இன்று பெங்களூரில் முதல் டெஸ்ட் போட்டியில் மோதவுள்ளது.

இந்திய அணியுடன் நான்கு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ள அவுஸ்ரேலிய அணியின் - முதலாவது போட்டிக்கு கில்கிறிஸ்ட் தலைமை தாங்கவுள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் பெயரும் இந்த டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பெற்றுள்ளது. ஆனால், அவர் போட்டியில் பங்கேற்பாரா என்ற சந்தேகம் தொடர்ந்து நீடித்துவருகிறது.

இதுவரை இந்த இரு அணிகளும் 17 முறை டெஸ்ட் தொடர்களில் மோதியுள்ளன. இதில் அவுஸ்ரேலிய அணி 8 தடவைகளும் இந்திய அணி 4 தடவைகளும் தொடர்களை வென்றுள்ளன. ஐந்து தொடர்கள் சமநிலையில் முடிவடைந்தன.

மொத்தமாக 64 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்ற இந்த இரு அணிகளில் அவுஸ்ரேலிய அணி 30 போட்டிகளில் வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் இதுவரை...

| ஆண்டு | போட்டி | இந்தியா | அவுஸ். | சமநிலை | இடம் |
|---|---|---|---|---|---|
| 1947 -48 | 5 | 0 | 4 | 1 | அவுஸ். |
| 1956 -57 | 3 | 0 | 2 | 1 | இந்தியா |
| 1959 -60 | 5 | 1 | 2 | 2 | இந்தியா |
| 1964 -65 | 3 | 1 | 1 | 1 | இந்தியா |
| 1967 -68 | 4 | 0 | 4 | 0 | அவுஸ். |
| 1969 -70 | 5 | 1 | 3 | 1 | இந்தியா |
| 1977 -78 | 5 | 2 | 3 | 0 | அவுஸ். |
| 1979 -80 | 6 | 2 | 0 | 4 | இந்தியா |
| 1980 -81 | 3 | 1 | 1 | 1 | அவுஸ். |
| 1985 -86 | 3 | 0 | 0 | 3 | அவுஸ். |
| 1986 -87 | 3 | 0 | 0 | 2 | இந்தியா- |
| 1991 -92 | 5 | 0 | 4 | 1 | அவுஸ். |
| 1996 -97 | 1 | 1 | 0 | 0 | இந்தியா |
| 1997 -98 | 3 | 2 | 1 | 0 | இந்தியா |
| 1999 -00 | 3 | 0 | 3 | 0 | அவுஸ். |
| 2000 -01 | 3 | 2 | 1 | 0 | இந்தியா |
| 2003 -04 | 4 | 1 | 1 | 2 | அவுஸ். |
| மொத்தம் | 64 | 14 | 30 | 19 | |

### துடுப்பாட்டத்தில் அசத்தியவர்கள்! (அவுஸ்ரேலியா)

| வீரர் | ஓட்டங்கள் | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| பொண்டிங் | 257 | 2003-04 | மெல்பேர்ன் |
| பொண்டிங் | 242 | 2003-04 | அடிலெய்ட் |
| லாங்கர் | 253 | 1999-00 | சிட்னி |
| ஹங்கிஸ் | 213 | 1980-81 | அடிலெய்ட் |
| டீன்ஜோன்ஸ் | 210 | 1986-87 | சென்னை |

### பந்துவீச்சில் அசத்தியவர்கள்! (அவுஸ்ரேலியா)

| வீரர் | விக்கெட் | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| பென்னட் | 6-52, 5-53 | 1956-57 | கல்கத்தா |
| டேவிட்சன் | 5-31, 7-93 | 1969-70 | கான்பூர் |
| டைமோக் | 5-99, 7-67 | 1979-80 | கான்பூர் |
| மெக்டெர்மட் | 5-76, 5-92 | 1991-92 | அடிலெய்ட் |
| மெக்ரா | 5-48, 5-55 | 1999-00 | சிட்னி |

### துடுப்பாட்டத்தில் அசத்தியவர்கள்! (இந்தியா)

| வீரர் | ஓட்டங்கள் | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| லக்ஷ்மன் | 281 | 2000-01 | கல்கத்தா |
| சச்சின் | 241 | 2003-04 | சிட்னி |
| ராவிட் | 233 | 2003-04 | அடிலெய்ட் |
| ரவி சாஸ்திரி | 206 | 1991-92 | சிட்னி |
| ராவிட் | 180 | 2000-01 | கல்கத்தா |

### பந்துவீச்சில் அசத்தியவர்கள்! (இந்தியா)

| வீரர் | விக்கெட் | ஆண்டு | இடம் |
|---|---|---|---|
| பேடி | 5-89, 5-105 | 1977-78 | பேர்த் |
| சந்திரசேகர் | 6-52, 6-52 | 1977-78 | மெல்பேர்ன் |
| குலாம் அகமது | 7-49, 3-81 | 1956-57 | கல்கத்தா |
| ஹர்பஜன்சிங் | 7-123, 6-73 | 2000-01 | கல்கத்தா |
| ஹர்பஜன்சிங் | 7-133, 8-84 | 2000-01 | சென்னை |

## பங்களாதேஷுடனான ஒரு நாள் போட்டி: நியூசிலாந்து அணித் தலைவராக வெற்றோறி நியமிக்கப்படலாம்!



(வெலிங்டன்)

நியூஸிலாந்தின் சுழற்பந்து வீச்சாளர் டானியல் வெற்றோரி அடுத்த மாதம் பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடருக்கான அணித்தலைவராக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் இரண்டு டெஸ்ட் போட்டிகள் விளையாடிய பின்னர் ஓய்வுக்காக தாயகம் திரும்பவுள்ளமையாலேயே வெற்றோரி அணித் தலைவராக நியமிக்கப்பட வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை ஜேக்கப் ஓரம், கிறேக் மக்மிலன், கிறிஸ் கெய்ன்ஸ் அகியோரும் அணித்தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட வாய்ப்புள்ளோர் பட்டியலில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

அடுத்தமாதம் பங்களாதேஷில் நடைபெறவுள்ள மூன்று ஒருநாள் போட்டிகளுக்கான அணி வீரர்கள் விபரம் கடந்த வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் நவம்பரில் அவுஸ்ரேலியாவுக்கு குறுகிய விஜயம் ஒன்றை நியூஸிலாந்து அணி மேற்கொள்ளவிருப்பதால் இரண்டுவார கால ஓய்வுக்காக ஸ்ரீபன் பிளமிங் பங்களாதேஷ் டெஸ்ட் போட்டிகளின் பின் நாடு திரும்புவார் .

இவரது இடத்துக்கே டானியல் வெற்றோரி நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. 1996/97 காலப்பகுதியில் இங்கிலாந்து அணிக்கு எதிராக வெலிங்டனில் நடைபெற்ற ஆட்டத்தில் வெற்றோரி முதன்முறையாக பங்கேற்றார்.

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி வரலாற்றில் மிக இளம் வயதினராக - 18 வயது 10 நாட்களில் களமிறங்கிய இவர் 55 டெஸ்ட் மற்றும் 139 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தாய்லாந்து ஓபன் ரெனிஸ் ரோஜர் பெடரர் சம்பியன்!

(பாங்கொக்)

பாங்கொக் நகரில் நடந்த தாய்லாந்து ஓபன் டென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரரான ரோஜர் பெரடரு சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

இந்த டென்னிஸ் போட்டி தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்கொக்கில் நடைபெற்றது. இதன் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பட்டம் வென்றதன் மூலம் ரோஜர் பெடரர் தொடர்ச்சியாக 12 பட்டம் வென்ற வீரர்களான ஜான் மெக்கன்ரோ மற்றும் ஜான்போர்க் ஆகியோரது பட்டியலில் இடம்பெற்றார். கடந்த 25 வருடங்களில் ஏ.டி.பி. பயணப்போட்டியில் தொடர்ந்து 12 பட்டங்களை வென்று சாதனை படைத்தவர்கள் ஜான்மெக்கன்ரோ மற்றும் ஜான் போர்க் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தாய்லாந்து ஓபன் இறுதிப்போட்டியில் பட்டத்தைக் கைப்பற்ற சுவிஸ் வீரர் பெடரரும், அமெரிக்க வீரர் ஆன்டிராடியும் மோதினர். இதில் முதல்நிலை வீரரான ரோஜர்பெடரர் 6-4, 6-0 என்ற நேர் செட்டுகளில் அமெரிக்காவின் முன்னணி வீரரான ஆன்டிராடிக்கை வீழ்த்தினார்.

இரண்டாம்நிலை வீரரான ராடிக்கை வீழ்த்த பெரடருக்கு 58 நிமிடங்களே பிடித்தது. முன்னதாக நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் மாரட்சபினுக்கு எதிராக ஆட்டத்தின்போது ராடிக்கின் வலதுகையில் காயம் ஏற்பட்டது.

இந்த இறுதிப்போட்டியில் ராடிக் கையில் ஏற்பட்ட காயத்துடனேயே ஆடினார். எனவே, அவரால் முழு அளவில் தனது திறமையை வெளிப்படுத்தமுடியாமல் தடுமாறினார். பெடரர் இந்தவருடம் அவுஸ்ரேலிய ஓபன், விம்பிள்டன் மற்றும் அடிமரிக்க ஓபன் ஆகிய கிராண்ட்லாம் பட்டங்களை வென்றது குறிப்பிடத்தக்கது.

## புதுடெல்கி ஹொக்கி டெஸ்ட் போட்டி; இந்தியாவை வீழ்த்தியது பாகிஸ்தான்!

(புதுடெல்கி)

புதுடெல்கியில் நடைபெற்ற ஹொக்கி டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் 3-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையே 8 ஹொக்கி டெஸ்ட்கள் கொண்ட தொடரை நடத்தத் திட்டமிட்டிருந்தது. இதில் முதல்கட்டமாக 4 போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெற்றன. இதில் பாகிஸ்தான் 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது கட்டப்போட்டிகள் டெல்கியில் நேற்று முன்தினம் தொடங்கின.

டெல்கியில் நடந்த முதல் போட்டியில் பாகிஸ்தான் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் வீரர் சோகைல் அப்பாஸ் இரண்டு கோல்கள் அடித்ததன் மூலம் அதிக கோல்களை் அடித்த வீரனின் உலக சாதனையை சமன் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

டச்சு வீரரான பால்லிட்ஜென் 267 கோல்கள் அடித்து அதிக கோல் அடித்த வீரர் என்ற உலக சாதனையைப் படைத்தார். தற்போது பாகிஸ்தான் வீரர் சோகைல் அப்பாஸ் இந்தச் சாதனையை சமன் செய்து புதிய சாதனை படைக்கத் தயாராக இருக்கிறார்.

முன்னதாக பாகிஸ்தான் அணி ஆட்டத்




தின் முதல் பாதியில் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. ஆட்டம் தொடங்கிய 6 ஆவது நிமிடத்தில் சஷிவ் ஜவாத் முதலாவது கோலை அடித்தார். பின்னர் 29 ஆவது நிமிடத்தில் பாகிஸ்தான் வீரர் சோகைல் அப்பாஸ் மூன்றாவது பெனால்டி கோணர் மூலம் மற்றொரு கோலை அடித்தார். இதன் மூலம் பாகிஸ்தான் அணி 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

அதன்பின்னர் 2 ஆவது பாதி ஆட்டத்தில்



50 ஆவது நிமிடத்தில் இந்திய வீரர் சந்தீப் மைக்கேல் ஒரு கோலடித்தார். இதன்மூலம் இந்திய அணி 1-2 என்ற நிலையில் இருந்தது. ஆனால் பலமுறை இந்திய அணிக்கு பெனால்டி வாய்ப்பு கிடைத்தபோதிலும், வீரர்களால் அதனை கோலாக்க முடியவில்லை. தவிர பல அரிய சந்தர்ப்பங்களைக்கூட இந்திய வீரர்கள் தவறவிட்டிருந்தனர்.

பின்னர் பாகிஸ்தான் வீரர் சோகைல் அப்பால் 65 ஆவது நிமிடத்தில் தனது இரண்டாவது கோலை அடித்தார். இதன்மூலம் பாகிஸ்தான் 3-1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்று வெற்றியும் பெற்றது.

இரண்டு அணிகளுக்கும் இடையிலான அடுத்த போட்டி சண்டிகாரில் நடைபெறவுள்ளது. இதில் புதிய உலகசாதனை படைப்பதற்காக பாகிஸ்தான் வீரர் சோகைல் அப்பாஸ் தயாராகவிருக்கிறார்.

## வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி!

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான 16, 18 வயதுப் பிரிவுகளுக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை பி.ப.2.30 மணிக்கு மூன்று மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இதில் நெல்லியடி மத்திய மாகாவித்தியாலய மைதானத்தில் - 16 வயது 'ஏ' பிரிவில நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தை எதிர்த்து இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், 16 வயது 'பி' பிரிவில் கரணவாய் மகாவித்தியாலயத்தை எதிர்த்து றோமன் கத்தோலிக்க பாடசாலையும், 18 வயது 'பி' பிரிவில் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்தை எதிர்த்து சிதம்பராக் கல்லூரியும் மோதவுள்ளன.

டயமன்ஸ் மைதானத்தில் 16 வயது 'ஈ' பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியை எதிர்த்து பொன்னம்பலம் மகாவித்தியாலயமும் 16 வயது 'டி' பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியை எதிர்தது வல்லை சிவகுரு வித்தியாலயமும் மோதவுள்ளன.

பொம்மஸ் மைதானத்தில் 16 வயது 'ஏ' பிரிவில் வல்வெட்டித்துறை இந்து தமிழ் கலவன் பாடசாலையை எதிர்த்து பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயமும் 'பி' பிரிவில் தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தை எதிர்த்து கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியும், 18 வயது 'ஏ' பிரிவில் கரவட்டி ஞானசாரியார் கல்லூரியை எதிர்த்து பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயமும் மோதவுள்ளன. (12)

27. கூட்டுக. 13013 நான்கு + 32013 நான்கு

28. 1:50,000 என்னும் அளவிடைக்கு வரையப்பட்ட கிடைப்படம் ஒன்றில் 9 cm நீளத்தினால் காட்டப்படும் வீதி ஒன்றின் உண்மையான நீளம் யாது?

29. AB, BC ஆகிய இரு நேர்கோடுகளின் சமதூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கு யாது? இது எவ்வாறு அழைக்கப்படும்? (பரும்படி படம் வரைதல் நன்று)

30. வரிப்படத்தில் காட்டப்பட்டவாறு கலங்கரை விளக்கு X ஆனது கலங்கரை விளக்கு Y இற்கு வடக்கே உள்ளது. X இல் உள்ள அவதானிப்பாளர் கப்பல் S இன் திசைகோள் 239° எனப் பதிகிறார்.




i. மேலே உள்ள தகவலுக்கு அமைய $\hat{NXZ}$ இன் பெறுமானத்தைக் காண்க?
ii. Y இல் இருந்து S இன் திசைகோள் யாது?

## தமிழ்மொழியும் இலக்கியமும்

01. பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றின் கீழும் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. 'வங்கினைப் பற்றிப் போகா வல்லுடம்பு என்ன நீங்கான்'

I) இக் கூற்று இடம் பெறும் பாடம்?
II) இக்கூற்று யாருக்கு கூறப்பட்டது?
III) யாரால் கூறப்பட்டது?
IV) 'வங்கு' எனக் குறிக்கப்படுவது யாது?

ஆ. 'உழையா அறம் வற்றி ஊழ்வழுவுச் சீற்றம் விளையாத நிலத்து உனக்கு எங்கன் விளைந்து'

I) இது யார் கூற்று?
II) யாருக்கு கூறப்பட்டது?
III) எச்சந்தர்ப்பத்தில் கூறப்பட்டது?
IV) இத்தொடரால் விளங்குவது என்ன?

02) பின்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால உரைநடையில் எழுதி அவை ஒவ்வொன்றிலும் காணப்படும் சிறப்புக்களைக் கூறுக.

அ. 'நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

ஆ.
'அடக்க முடையவர் அறிவிலர் என்றெண்ணிக்
கடக்க கருதவும் வேண்டா - மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு'

இ. 'நன்றிப் பயன்தூக் வாழ்தல் நனி இனிதே
மன்றன் கொடும்பாடுரையாத மாண்பினிதே
அன்றறிவார் யாரென றடைக்கலம் வெளவாத
நன்றின் நன்கினிய தில்'

03. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) உவமை எவ்வாறு தோன்றும் என தொல்காப்பியர் கூறுகிறார்?

ஆ) கருத்தில் மட்டும் அறிந்ததைக் கட்புலனுக்குக் கொண்டு வருவதில் உவமை பயன்படுகிறது.

இ) கவிச்சக்கரவர்த்தி கம்பருடன் உயர்ந்த பாத்திரமான இலக்குவன் கூற்றில் தாழ்ந்த உவமையைக் கையாண்டுள்ளார். விளக்குக?

04. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு மாத்திரம் விடை தருக.

அ) பசிவந்திடப் பறந்துவிடும் பத்துவிடயங்களும் எவை?

ஆ) 'இனியவை நாற்பது' என்ற பாடலில் குறிப்பிட்டுள்ள இனியவை எவை?

இ) 'இன்னா நாற்பது' என்ற பாடலில் குறிப்பிட்டுள்ள இன்னாதவை எவை?

05.

அ) சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறப்பட்ட தாழ்ந்த உவமை யாது?

ஆ) கட்டுரை ஆசிரியர் தாழ்ந்த பொருளை உவமையாகக் கையாளுவதற்கு கூறும் காரணம் யாது?

ஔவையாரின் நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துக.

I) மேன்மக்கள்
II) பண்பற்றவர் (கீழோர்)
III) நல்லாரால் எல்லோருக்கும் நலம் பெருகும்.
IV) துணை வலிமை தேவை.
V) அறிவற்றவரின் இழிவு.
VI) போலியறிவின் புண்மை.

**p. மாறன்**

இங்கே மடிக்கவும்





# மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

◆ பின்வரும் விவரணத்தை வாசித்து கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.

அயோத்தியை தலைநகராகக் கொண்ட கோசலை நாட்டை அரிச்சந்திரன் ஆண்டான். இவனது மனைவி பெயர் சந்திரமதி. மகன் பெயர் லோகிதாசன். அரிச்சந்திரன் வாய்மை தவறாதவன். ஒரு முறை இவன் சத்தியம் தவறாதவனா? என்பதைச் சோதிக்க விசுவாமித்திரர் விரும்பினார். அரிச்சந்திரனை பொய் சொல்ல வைகக பல சூழ்ச்சிகள் செய்தார். இதனால் அரிச்சந்திரன் நாடு நகரங்களை இழந்தான். மனைவி, மகனை அடிமைகளாக காலகண்டன் என்பவனிடம் விற்றான். சுடலை காத்தான். ஈற்றில் இச்சோதனைகளில் எல்லாம் வெற்றி பெற்றான். இவ்வாறு வாய்மை காத்ததால் விசுவாமித்திரரின் ஆசியைப் பெற்று மீண்டும் அயோத்தியை ஆண்டான்.

1) அயோத்தியை தலைநகராகக் கொண்ட நாடு எது?
..............................................................
2) அரிச்சந்திரன் மனைவி பெயரென்ன?
..............................................................
3) அரிச்சந்திரன் சத்தியம் தவறாதவன் என்பதைச் சோதிக்க விரும்பியவர் யார்?
..............................................................
4) அரிச்சந்திரன் மனைவி, மகனை யாரிடம் விற்றான்?
..............................................................
5) வாய்மை என்பதற்கு ஒத்தசொல் தருக.
..............................................................
6) மனைவி என்பதற்கு எதிர்ப்பாற்சொல் தருக.
..............................................................
7) ஈறு என்பதன் எதிர்ச்சொல் யாது?
..............................................................
8) ஆண்டான் என்பதன் நிகழ்காலச்சொல் யாது?
..............................................................
9) அரிச்சந்திரன் வாய்மை காத்ததால் யாருடைய ஆசியை பெற்று மீண்டும் அரசாண்டான்?
..............................................................
10) சூழ்ச்சிகள் என்பதன் ஒருமைச்சொல் யாது?
..............................................................

◆ பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

1. மரக்குற்றியைப் / வந்தது / நரி / கொண்டு / பந்தலுக்கு/ அருகில்
..............................................................
2. வாழ்வே/ செல்வம்/ நோயற்ற/ குறைவற்ற
..............................................................

◆ பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக் எழுதுக.

1. த, ளி, த், கி, ட், டு : ..............................
2. வ, ந், து, லை, ப், ப : ..............................

◆ பின்வரும் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான தமிழ்ச்சொல்லை தமிழ்மொழியில் எழுதுக.

1. Chair : ..............................
2. Peon : ..............................
3. mosque : ..............................
4. whistle : ..............................

◆ சரியான விடையின் கீழே கோடு இடுக.

1) விதைகளைப் பரப்பும் காரணியல்லாதது.
1. காற்று நீர் 2. ஒளி
3. அதிர்ந்து வெடிக்கும் 4. பொறிமுறை.

2) செடி வகைகளில் ஒன்று
1. மரவள்ளி 2. மிளகாய் 3. பாகல் 4. பூசணி

3. தேசியப்பூ எனக் கூறப்படுவது
1. நீலோற்பலம் 2. தாமரை 3. மல்லிகை 4. செவ்வரத்தை

4. சிறிய பிரிவுற்ற இலைகளைக் கொண்டது.
1. பாகல் 2. வில்வம் 3. பனை 4. வேம்பு

5. எமது தேசிய உணவு.
1. சம்பாச்சோறு 2. நெல்லரிசிச்சோறு
3. சவ்வரிசிச் சோறு 3. வெள்ளைச்சோறு

6. எமது நாட்டை ஆண்ட ஐரோப்பிய சாதியினர்
1. பிரான்சியர் 2. கனேடியர்
3. போர்த்துகேயர் 4. ஜப்பானியர்

7. இலங்கையின் புனித மரம்
1. வேம்பு 2. மா 3. வெள்ளரசுமரம் 4. நாகமரம்

8. தூக்குக் குண்டினைப்பயன்படுத்துபவர்
1. மேசன்மார் 2. கொல்லர் 3. தச்சர் 4. கமக்காரர்

9. அஞ்சலோட்டக் குழுவில் அங்கம் வகிப்பவர் எண்ணிக்கை
1. எட்டு 2. நான்கு 3. இரண்டு 4. ஒன்று

10. துளை இடுவதற்குப் பயன்படும் உபகரணம்
1. கைவில்லை 2. அரம் 3. துறப்பணம் 4. சம்மட்டி

7) ஒவ்வொரு உருவிலும் காணப்படும் உருக்களின் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1 2 3 4



8) பின்வரும் உபகரணங்கள் எத்தொழில்களுக்குப் பயன் படுத்தப்படுகின்றன.

1. மண்வெட்டி : ..............................
2. ஸ்ரலஸ்கோப் : ..............................
3. புகையிலை : ..............................
4. மட்டப்பலகை : ..............................

9) பின்வரும் பாடலிலுள்ள வெற்றிடங்களைப் பொருத்தமான சொல் கொண்டு நிரப்புக.

பழம் நிறைந்த ..............................
பாத்துச் செல்லும்.............................. போல்
.............................. நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் .............................. போல்
(கிளியைப், மக்கள், சோலையைப், வளம், காகத்தைப்)

10) பின்வருவன சரியாயின் " √ " எனவும் பிழையாயின் 'X" எனவும் எழுதுக.

1. நீலச்சாயத்துடன் சிவப்புச் சாயத்தைக் கலப்பதால் ஊதா நிறத்தைப் பெறமுடியும் (..........)
2. மரவள்ளிக்கிழங்கு வகைகளில் ஒன்றாகும். (..........)
3. ஒன்பது ஓர் இரட்டை எண்ணாகும். (..........)
4. மள மள என்பது அடுக்கு மொழியாகும். (..........)
5. பழங்களில் இருந்து பழச்சாறினைப் பிழிந்தெடுக்க முடியாது. (..........)
6. இரண்டாயிரத்து முன்னூற்று ஏழு என்ற எண்ணில் மூன்றின் எண் பெறுமானம் முந்நூறு. (..........)
7. உணவுகளுக்குப் பயன்படும் கீரைவகைகளுள் பொன்னாங் காணியும் ஒன்று. (..........)
8. பொதி செய்த உணவுகளின் கூறுகள் அவற்றின் மேலுறையில் காணப்படும். (..........)
9. வளியில் நீராவி உண்டு. (..........)
10. வாயிலிருந்து வளியை ஊதுவதன்மூலம் வாசிக்கப்படக்கூடிய இசைக்கருவி புல்லாங்குழல் ஆகும். (..........)

11) தரப்பட்டுள்ள உருக்களுக்குரிய பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.





1.......................... 2. ......................





3. .................... 4. ....................

12) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.




இவ்வுருவின் சுற்றளவு யாது? ................................

2. ஒரு நோயாளருக்கு 3 தடவைக்கு 2 மாத்திரைகள் வீதம் 36 மாத்திரைகள் வழங்கப்பட்டன. இம்மாத்திரைகள் எத்தனை நாட்களுக்குப் போதுமானவை?

..........................................................................

3. 5l பாலில் இருந்து 2l 220ml பயன்படுத்தப்பட்டது. மீதியான பாலின் அளவு யாது?

..........................................................................

4. 1Kg பருப்பின் விலை ரூபா 75.00 எனின், 1.5 kg பருப்பின் விலை யாது?

..........................................................................

5. பெருக்கல் X குறியீட்டினாலும், வகுத்தல் - குறியீட்டினாலும் காட்டப்படுமெனில், 3 X 4-2 இன் பெறுமானம் யாது?

..........................................................................

6. இவ்வுருவில் நிழற்றப்படாத பகுதியின் பின்னமென்ன?



..........................................................................

7. காட்டப்பட்டுள்ள தளவடிவங்கள் யாவற்றையும் பயன்படுத்தி அமைக்கக்கூடிய முப்பரிமாணப் பொருளின் பெயரை எழுதுக?



..........................................................................

8. 1/2, 1, 1 1/2 , 2 , [ ] இவ் வெண்கோலத்தில் வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய எண்ணை எழுதுக.

..........................................................................

9. எல்லாப் பிள்ளைகளுக்கும் 3 பலூன்கள் வீதம் கொடுக்க ஆசிரியை சசிரேகா 10 டசின் பலூன்களை வாங்கி வந்தார். வகுப்பிலுள்ள பிள்ளைகள் எத்தனை?

..........................................................................

10. ஒரு பலூனின் விலை ரூபா 6.00 எனின், ஆசிரியை சசிரேகா தான் வாங்கிய பலூன்களுக்கு எவ்வளவு பணம் கொடுத்தார்?

..........................................................................

13) "நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றால் ....." என்ற தலைப்பில் நான்கு சொற்களுக்கு குறையாத ஆறு வசனங்கள் பொருத்தமான எழுவாய், பயனிலையுடன்) எழுதுக.

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

மாணவர்களுக்கு சுகாதாரக்கல்விப் பணியகத்தின் அறிவுறுத் தல்கள்.

1.

காலையிலும், மாலையிலும் பல் துலக்கவேண்டும். பல்லினுள், வெளிப் பக்கங்களை அவதானித்துத் துலக்குதல் வேண்டும். வாயைச் சுத்தம் செய்யும்போது பல், முரசு, நாக்கு ஆகியவற்றைச் சுத்தம் செய்தல் வேண்டும். இனிப்புப் பண்டங்களை உண்பதைக் குறைத்தல் வேண்டும். இனிப்புப் பண்டங்களுக்குப் பதிலாக பழங்களை உண்பது நல்லது.

i) இந்த அறிவுறுத்தலின் தலைப்பு யாது?

..........................................................................

ii) நாம் எப்போது பல் துலக்கவேண்டும்?

..........................................................................

iii) எந்தப் பண்டங்களை உண்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்?

..........................................................................

iv) இனிப்புப் பண்டங்களுக்குப் பதிலாக எதை உண்பது நல்லது?

..........................................................................

v) வாயிலுள்ள எந்த உறுப்புக்களைச் சுத்தம் செய்ய வேண்டும்?

..........................................................................

vi) அறிவுறுத்தல்கள் என்பதன் ஒருமைச் சொல்லினை எழுதுக.

..........................................................................

vii) சுத்தம் என்பதற்கு ஒத்தசொல் இரண்டினை எழுதுக.

..........................................................................

viii) பழம் என்பதற்கு எதிர்ச்சொல் தருக.

..........................................................................

ix) துலக்குதல் வேண்டும் என்ற வினைச் சொல்லின் எதிர்மறை வடிவம் யாது? ..........................................

K.T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்

இங்கே மடிக்கவும்



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004

## கணிதம்

01. ஒழுங்கான குவிவுப் பல்கோணி ஒன்றின் ஓர் அகக்கோணம் $135^0$ பருமனுடையதாயின், அப்பல்கோணியின் பக்கங்களின் எண்ணிக்கை யாது?

02. 100 ml பெற்றோலைப் பயன்படுத்தி மின்பிறப்பாக்கி ஒன்றை 7 நிமிடங்கள் இயக்கலாம் எனில், 0.5l பெற்றோலைப் பயன்படுத்தி மின்பிறப்பாக்கி எத்தனை நிமிடங்கள் இயங்கச் செய்யப்படலாம்?

03. சுருக்குக: $\frac{0.0093}{0.031} + (0.3 * 0.02)$

04. காரணி பற்றிய அறிவைப் பயன்படுத்தி சுருக்குக. $\sqrt{93 x 107 + 49}$

05. உருவில் உள்ள தரவுகளைப் பயன்படுத்தி X,Y என்பவற்றின் பெறுமானங்களைக் காண்க?




06. பொருள் ஒன்றை 1260 ரூபாவுக்கு விற்பதனால் 10% நட்டம் ஏற்படுகின்றது எனில், அப்பொருளின் கொள்விலை யாது?

07. செவ்வட்ட உருளை ஒன்றின் கனவளவு $53 cm^3$ உம் குறுக்கு வெட்டுப் பரப்பு 10.6 cm உம் ஆகும். உருளையின் உயரத்தைக் காண்க?

08. உருவில் ABCD ஒரு சரிவகம். AD=7cm, BC=10cm அதன் பரப்பளவு $34 cm^2$ எனின் A இன் நீளத்தைக் காண்க?




09. உருவில் O என்பது வட்டத்தின் மையம். AC ⊥OB ஆகும். AC=12cm, OC=9cm எனின், வட்டத்தின் விட்டம் யாது?




10. இரு எண்களின் கூட்டுத்தொகை 7 ஆகும். அவ்விரு எண்களினதும் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 25 எனின், அவ்விரு எண்களையும் காண்க?

11. உற்பத்தியினூடாகவும் புள்ளி (3,9) இன் ஊடாகவும் செல்லும் நேர்கோட்டின் சமன்பாடு யாது?

12. X=3 எனின், (x-1)+ 1/2 (x+1) இன் பெறுமானத்தைக் காண்க?

13. பின்வரும் கூற்றுக்களைத் தொடை மொழியில் எடுத்துரைக்க.
i. தொடை P என்பது தொடை Q வில் முழுமையாக உள்ளடங்குகிறது.
ii. தொடை x இற்கும் தொடை Y இற்கும் பொதுவான மூலகங்களின் எண்ணிக்கை 7 ஆகும்.

14. 9,4,12,17 எனும் எண்களின் இடை = P
12,9,17,A எனும் எண்களின் இடை = (P+3) எனில் A யின் பெறுமானம் யாது?

15. சுருக்குக $\frac{x^2-2x+1}{5x-5}$

16. ஒரு விருத்தியின் n ஆம் உறுப்பு 3n-4 ஆகும். இத்தொடரின் முதல் மூன்று உறுப்புக்களையும் காண்க?

17. $2.7 x 10^5$ என்பதனை சாதாரண (தனி) எண்ணாக எழுதுக?

18. $P = \frac{S(C-F)}{C}$ என்பதில் C ஐ எழுவாயாக எழுதுக?

19. உருவில் O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில் PQ என்பது தொடலி, $P\hat{Q}R = 200$ எனில்,
i. $Q\hat{S}R$ ஐக் காண்க?
ii. QPR ஐக் காண்க?




20. ஒரு தொகைப் பணத்தை P,Q ஆகியோரிடையே 3:7 என்ற விகிதத்தில் பங்கிட்டபோது, Q பெற்ற பணம் P பெற்ற பணத்திலும் ரூபா 84 அதிகமாக இருந்தது. பங்கிடப்பட்ட முழுத்தொகை யாது?

21. வகுப்பு ஒன்றில் உள்ள ?? மாணவர்கள் கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளின் உத்தேச சராசரி 69 புள்ளிகள் ஆகும். இப்பரம்பலின் விலகல் (-46) எனில், உண்மையான சராசரிப் புள்ளி யாது?

22. படத்தில் உள்ள வட்ட வரைபு ஒருவரின் ஒருநாள் வருமானத்தின் செலவுக் கோலத்தைக் காட்டுகின்றது. அவரின் நாளாந்த சேமிப்பு ரூபா 35 எனில், 5 வேலைநாள்களைக் கொண்ட வாரம் ஒன்றுக்கான அவரின் மொத்த வருமானம் யாது?




23. 5Km நீளமான வீதியில் 100 m தூரத்துக்கு ஒரு கம்பம் என்ற ரீதியில் நடுவதற்கு எத்தனை மின்கம்பங்கள் வேண்டும்?

24. X இன் பெறுமானம் காண்க. $2^x x 8^x = 256$

25. ஒரு பக்க நீளம் 4r ஆகவுள்ள சதுர வடிவ உலோகத் தகடு ஒன்றில் இருந்து படத்தில் காட்டியவாறு r ஆரையுடைய வட்டங்கள் நான்கு வெட்டியகற்றப்பட்ட பின்னர் எஞ்சியதாக உள்ள பகுதி A யின் பரப்பளவைக் காண்பதற்குப் பொருத்தமான சூத்திரம் ஒன்றைப் பெறுக?
(r ஆரையுடைய வட்டத்தின் சுற்றளவு $= 2 \pi r$)



26. உருவில் AC=10cm, கோசைன் $60^0 = 0.5$ எனின், BC யின் பருமன் யாது?



# கோதுமை மா விற்பனையில் சில வர்த்தகர்கள் மோசடி!

## விலைக்கட்டுப்பாட்டுப் பகுதி எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோதுமை மாவில் உள்ள இரண்டு தரங்களைப் பயன்படுத்தி சில வர்த்தகர்கள் குறித்த விலையிலுள்ள மாவை கூடிய விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் இது குறித்து எச்சரிக்கையுடன் இருக்குமாறும் விடுதலைப் புலிகளின் நிதித்துறை விலைக்கட்டுப்பாட்டு பகுதி பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

பிறீமா நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படுகின்ற மாவில் இரண்டு தரங்கள் உள்ளன. இதில் முதலாம் தரத்தில் உள்ள மாவானது அதன் பொதியில் சிவப்பு நிறத்தால் வியாபாரக்குறி இடப்பட்டுள்ளது. இதன் மொத்த விற்பனவு விலை 1270 ஆகும்.

இரண்டாந்தர மாவானது அதன் பொதியில் பச்சை நிறத்தாலான வியாபாரக்குறி இடப்பட்டுள்ளது. இதன் மொத்த விற்பனவு விலை ரூபா 1105 ஆகும்.

இந்த வேறுபாட்டை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி சில வர்த்தகர்கள், பச்சை மூடை மாவை - சிவப்பு மூடை மாவின் விலைக்கு விற்பனை செய்துவருகின்றனர்.

இந்த விற்பனையானது முற்றிலும் நுகர்வோரைப் பாதிக்கும் ஒரு செயல் ஆதலால், இத்தகைய நடவடிக்கையைத் தடுக்க மக்கள் விழிப்பாக இருந்து 021-2227594, 021 - 2285003 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தகவல்களை வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்வதாக அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### ஐக்கிய இராச்சியத்துக்கான

# பட்டப்பின் படிப்பு புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

பொது நலவாயமைப்புப் பட்டப் பின் படிப்பு புலமைப்பரிசில்கள் - ஐக்கிய இராச்சியம் - 2005 திட்டத்துக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து கல்வி அமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பொதுநலவாயமைப்புப் புலமைப் பரிசில்கள் மற்றும் நட்புறவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பட்டப் பின் படிப்பு புலமைப் பரிசில்கள் ஐக்கிய இராச்சிய உயர்கல்வி நிறுவனம் ஒன்றில் அடுத்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கற்கைத் துறைகள் வரையறுக்கப்படாத இந்தப் புலமைப்பரிசில் திட்டமானது - 6 மாதம், ஒரு வருடம், மூன்று வருடங்கள் என்ற கால அடிப்படையில் அமைந்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை இந்த மாதம் 22 ஆம் திகதிக்கு முன் செயலாளர், கல்வி அமைச்சு, உயர்கல்விப் பிரிவு, இல 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதுபற்றிய மேலதிக விபரங்களை இந்த மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடமுடியும்.(31)

### யாழ். மாவட்டத்தின்

# தேர்தல் மீறல் தொடர்பான வழக்கு டிசம்பர் 13 இல் விசாரணைக்கு!

கடந்த பொதுத்தேர்தலின்போது யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அடிப்படை மீறல் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 13 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

இந்த வழக்குகள் ஈ.பி.டி.பி மற்றும் சுயேட்சைக் குழு ஒன்றினாலும் தாக்கல் செய்யப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாக யாழ்ப்பாணத்தில் நீதியான, நியாயமான தேர்தல் இடம்பெறவில்லை என்று இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு எதிரானவர்கள் வாக்குச்சாவடிகளில் இருந்து மிரட்டப்பட்டதுடன், கள்ள வாக்குகள் அதிகளவு போடப்பட்டதாகவும் தமது மனுவில் முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## விளக்கு சஞ்சிகையின் பரிசளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

கல்வி மேம்பாட்டுப் பேரவையினரின் விளக்கு சஞ்சிகை நடத்திய எழுத்தாக்கல் போட்டிகளுக்கான பரிசில் தினமும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் பிற்போடப்பட்டுள்ளது.

ஆசிரியர் நாளையொட்டி விளக்கு சஞ்சிகையினரால் நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா ஆசிரியர் தினமாகிய இன்றே நடைபெறுமென ஏற்கனவே கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்த நிகழ்வானது பிறிதோர் தினத்தில் பொது நிகழ்வாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# வீடமைப்புத் திட்டப் பணிகளை உலக வங்கி குழு பார்வையிட்டது

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டு வரும் முதற்கட்ட வீடமைப்புத்திட்ட வேலைகளைத் தர மதிப்பீடு செய்வதற்காக, உலக வங்கிக் குழுவொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது.

உலகவங்கியின் ஆலோசகர் ஏடன் நாராயணன் தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த குழுவில் உலக வங்கியின் பிரதிநிதிகளான மொறார், றொபின் ஜாக், நீனா கட்டயா மற்றும் வடக்கு - கிழக்கு மாகாண வீடமைப்புத் திட்ட பணிப்பாளர் எம்.குரூஸ் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

இவர்கள் யாழ்.செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துகொண்டனர். யாழ்.மாவட்டத்தில் தற்போது முதல்கட்டமாக 125 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

இதனைத் தொடர்ந்து 35 ஆயிரம் வரையிலான வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டிய நிலை உள்ளது. அதனை எவ்வாறு முன்னெடுப்பது, எந்த அடிப்படையில் பயனாளிகளைத் தெரிவு செய்வது முதலான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினர்.

தொடர்ந்து மதியம் 1.30 மணியளவில் கொழும்புத்துறை பகுதியில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளைச் சென்று பார்வையிட்டதுடன், அங்கு செயற்படும் கிராமிய அபிவிருத்தி குழுவினருடன் விசேட கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினர்.

தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் சென்று வீடமைப்புக் குறித்து ஆராய்ந்து சென்றனர். (ப)

# ஒழுங்கு விதிகளை மீறிய சாரதிகளுக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் மாத்திரம் சட்டவிதிகளுக்கு முரணான வகையில் வாகனம் செலுத்திய சாரதிகளிடமிருந்து, கடந்த மாதம் மட்டும் ஒரு லட்சத்து 35 ஆயிரம் ரூபா அபராதம் பெறப்பட்டுள்ளது.

இந்தத் தொகை யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் யாழ்.பொலிஸாரால் பிடிக்கப்பட்ட வாகனச்சாரதிகளிடமிருந்து பெறப்பட்டவையாகும்.

யாழ்.மாவட்ட நீதிமன்றத்தால் 44 ஆயிரத்து 750 ரூபாவும், பொலிஸாரால் 91 ஆயிரத்து நூறு ரூபாவும் தண்டப்பணமாகப் பெறப்பட்டுள்ளது.

எனவே கடந்த மாதம் யாழ்ப்பாண பொலிஸ் பிரிவில் மாத்திரம் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 750 ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மொத்தமாக மூன்று லட்சம் பேர்வரை கடந்த மாதம் மட்டும் தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாகவும், இந்த ஆண்டு இதுவரை ஏறக்குறைய 50 லட்சம் ரூபா வரை இவ்வாறு தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாகவும், இப்பணம் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்காகவே வழங்கப்படுவதாகவும் யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

இனிவருங் காலங்களில் சைக்கிள்களில் இலக்கத் தகடும் பரிசோதிக்கப்படவுள்ளதுடன், இரவில் மின் விளக்கில்லாது பயணிக்கும் சைக்கிள்களின் உரிமையாளர்களிடமிருந்தும் தண்டப்பணம் அறவிடப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

# பிறப்பு–இறப்பு பதிவு அலுவலகத்துக்கு அலைந்து திரியும் பொதுமக்கள்!

## ஊழியர்களின் அசமந்தப் போக்கே காரணமாம்

யாழ்.செயலகத்தில் இயங்கும் பிறப்பு - இறப்பு, விவாகப்பதிவாளர் அலுவலக ஊழியர்கள் அசண்டையீனமாக செயற்பட்டுவருவதாக பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தொலைந்துபோன தமது பதிவுப் பத்திரங்களை மீளப்பெறச் செல்வோரிடம் அவை இல்லை எனத் தெரிவித்து வருவதுடன், அவர்களது கடமைகளிலும் கரிசனையின்றிச் செயற்பட்டு வருதாகவும் கூறப்படுகிறது.

இரண்டு, மூன்று தடவை அலைந்து திரிந்தபின்னரே அவை இருப்பதாகக் கூறி அவற்றை வழங்குகின்றனர்.

அண்மையில் மல்லாகம் பகுதியைச் சேர்ந்த ஒருவரது பிள்ளையின் பிறப்புச் சான்றிதழுக்கான மூலப்பிரதி கோரி விண்ணப்பித்திருந்தபோது, அது இல்லையெனத் தெரிவித்து பதிவாளர் திணைக்களம் கடிதம் அனுப்பியிருந்தது.

எனினும், அவர் தொடர்ந்தும் முயற்சித்ததன் பயனாக அந்தப் பிறப்புச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது.

இவ்வாறு ஊழியர்கள் அசமந்தப்போக்குடன் செயற்படுவதால், பொதுமக்கள் செயலக வாசலில் முகவர்களாகச் செயற்பட்டுக்கொண்டிருப்போரிடம் பணம் கொடுத்து தமது கடமைகளை நிறைவுசெய்ய நேரிடுகிறது.

இதனால் ஏழை மக்கள் பலர் ஏமாற்றப்படும் சம்பவங்களும் இடம் பெற்றுவருகின்றன. ஊழியர்கள் தமது கடமைகளைச் சரியாக மேற்கொண்டால் பொதுமக்களின் சிரமம் நீக்கப்படுமென்றும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

# உடற்கல்வி டிப்ளோமா பரீட்சை திங்கட்கிழமை முதல் ஆரம்பம்!

யாழ்.பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி டிப்ளோமா பரீட்சைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் காலதாமதமின்றி தமது அனுமதி அட்டைகளைப் பீட அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இநதப் பரீட்சை தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற விரும்பும் பரீட்சார்த்திகள் உடனடியாக உடற்கல்வி பீட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இதற்கான நேர அட்டவணையை விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என பரீட்சைக் கிளைப் பதிவாளர் அறிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் சமுர்த்தி மகா சங்க திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரசாங்க அதிபர் உரையாற்றுவதையும், யாழ்.பிரதேச செயலர், முகாமைத்துவப் பணிப்பாளர், சமூகசேவை உத்தியோகத்தர், மகாசங்க கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர், க.தம்பிராசா மற்றும் உறுப்பினர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## புலமைப்பரிசில் முடிவு

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலிருந்து இம்முறை ஆறு மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விபரம் வருமாறு -

இரத்தினசிங்கம் கீர்த்தனா (145 புள்ளி), கேசவன் சோபனா(144 புள்ளி), அருந்தவம் பவித்திரா (138 புள்ளி), அன்ரன்லால் லவனா (137 புள்ளி), அம்பலவாணர் தவக்குமார் (126 புள்ளி), இராசநாயகம் சசிலா (124 புள்ளி). மேலும் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் 100 இலும் அதிகமான புள்ளிகளை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(94)

## பாடசாலைக்கு நீர்த்தாங்கிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனத்தினரின் உதவியுடன் குடிநீர்த் தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம், யாழ்.மாவட்டத்திலுள்ள 75 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு நீர்த்தாங்கி அமைக்கப்படவுள்ளதாக யாழ்.கல்வித்திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

## விண்ணப்பங்கள் கோரல்

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே சகல கற்கை நெறிகளையும் சேர்ந்த பகல்நேர, மாலைநேர மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்பு தமது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை உயர் தொழில்நுட்ப நிறுவன அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு நிறுவன இயக்குநர் தெரிவித்தார். (25)

## விரிவுரைகள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தகவல் தொழில்நுட்ப பூங்கா மீண்டும் நகரின் மத்தியிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டு வருவதால், தேசிய அபிவிருத்தி அதிகாரசபையின் கட்டடத்தில் இயங்கிய அனைத்துப் பிரிவுகளுக்குமான விரிவுரைகள், செய்முறைகள் யாவும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இடைநிறுத்தப்பட்டுள்ள சகல பிரிவுகளுக்குமான விரிவுரைகள் மற்றும் செய்முறை வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

எட்டாவது அகவையில்



பெயர் : தே.கோகுலன்
முகவரி : கூவில், புலோலி தெற்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்

# தமிழ் மக்களைப் பிளவுபடுத்த தீய சக்திகள் திட்டமிட்டு வருகின்றன

## மன்னார் அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன்

(மன்னார்)

சமாதானத்துக்கான ஒத்துழைப்புடன் நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். தமிழ்மொழி பேசும் மக்களைப் பிளவுபடுத்தவேண்டும் என்று சில தீயசக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் தெரிவித்தார்.

மன்னாரில் கடந்தவாரம் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில் -

கரிசல் பகுதியில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து இரவு 9 மணிக்கு எமது அரசியற் செயலகப் பகுதியில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து இரவு 12 மணியளவில் எமது செயலகங்கள் தாக்கப்பட்டன. இது ஏற்கனவே திட்டமிட்ட ஒரு செயலாக இருக்கிறது. எமது செயலகத் தாக்குதலுக்கு முற்றுமுழுதாக பொலிஸாரின் ஒத்துழைப்பும் இருந்தது. இதுதொடர்பாக 10 பொலிஸாரை அடையாளம் கண்டுள்ளோம். இதனைப் பொலிஸ் அதிகாரிகளுக்கும், கண்காணிப்புக் குழுவுக்கும் அறிவித்துள்ளோம. அவர்கள் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற ஒரு தனி நபரின் கொலையை எம்மீது சுமத்துவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எமக்கும் அந்தக் கொலைக்கும் எதுவிதமான தொடர்பும் இல்லை. தமிழ், முஸ்லிம் என்ற தற்காப்பால் நாங்கள் ஒரே பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்ற உணர்வுடனும், தமிழ்மொழி பேசுபவர்கள் என்ற உணர்வுடனும் இருக்கிறோம்.

மன்னார் மாவட்டத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மதங்களுக்கும், மக்களுக்கும் இடையே பிரச்சினையைத் தூண்டிவிட்டுச் சிலர் குளிர்காய முற்பட்டு வருகின்றனர். தேசவிரோதக் கும்பல்களே இதற்குக் காரணமாக இருக்கின்றன. பொலிஸார், இராணுவத்தின் அடிவருடிகளாகவும் இருக்கின்றனர். அவர்களுக்குப் பிரச்சினை என்ன என்றால், நாங்கள் அரசியல் நடவடிக்கைகளுக்கு வந்த பின்னர் மன்னாரில் இடம்பெற்றுவந்த சில சமூகவிரோதச செயல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம். இது அவர்களுக்குப் பிரச்சினையாக இருப்பதே காரணம்.

மன்னார் மாவட்டம் இன்று போதைப் பொருளின் கேந்திர நிலையமாக மாறியுள்ளது. இளம் சமூகத்தினரை இதற்கு அடிமைப் படுத்தும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனைவிட ஆபாசப்படங்களை விநியோகித்து சமூகச் சீரழிவுககு இட்டுச் செல்கின்றனர். இதுவரை காலமும் இந்த நடவடிக்கையால் செயற்பட்டு வந்தவர்கள் மதம் என்ற ஒன்றினை வைத்து தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் ஓர் பிளவை ஏற்படுத்த வேண்டும் என்று முக்கியமாக கங்கணம் கட்டி நிற்கிறார்கள் என்பது தான் உண்மை.

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் இடம்பெற்ற கொலைக்கு காரணம் என்ன, ஏது என்று அறியாமல் திட்டமிட்ட முறையில், உடனடியாக எமது இயக்கத்தின் காரியாலயத்தின் மீது சில முஸ்லிம் குண்டர்கள் தாக்கியதானது மிகவும் மோசமான காட்டுமிராண்டித் தனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த கொலைக்கான உண்மை நிலை என்னவென்று விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆதாரங்கள் ஏதுமின்றி அபாண்டமான குற்றத்தினை சுமத்துவது கவலைக்குரிய ஒன்றாகும்.

எமது காரியாலயம் தாக்கப்பட்டதை அடுத்து, தமிழர்களும் வன்முறையில் இறங்கியிருந்தால் நிலை வேறு. ஆனால், நாங்கள் மிகவும் அமைதிகாத்தோம். சமாதானத்துக்காகச் செயற்பட்டு வருகிறோம். உண்மையின் நிலை கண்டறியப் படவேண்டும்.

மன்னார் வாழ் மக்கள் அனைவரும் ஒரே மொழி பேசுபவர்கள், மன்னார் மாவட்டத்துக்குரியவர்கள் அனைவரும் மதத்துக்கப்பால் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக இருக்க வேண்டும். முக்கியமாக எமக்கும் அந்தக் கொலைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்று முஸ்லிம் சகோதரர்களுக்கு தெரிவிக்கின்றேன். என அவர் மேலும் தெரிவித்தார்.

# தொழிற்பயிற்சி நிலையம் இல்லாததால் இடைவிலகிய மாணவர்கள் பாதிப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இதுவரை அரச தொழில்பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கப்படாத காரணத்தால் பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்கள் உட்பட தொழிற்பயிற்சி பெறவேண்டிய பலர் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஆயிரத்து அறுநூறு மாணவர்கள் பாடசாலைக் கல்வியைவிட்டு இடைவிலகியுள்ளனர். இவர்கள் சீரான தொழிற்பயிற்சியையும், பெறுமதிவாய்ந்த சான்றிதழையும் பெற்றுக்கொள்ளும் வகையில் இங்கு அரச தொழிற்பயிற்சி நிறுவனம் அமைக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சியில் அரச சார்பற்ற நிறுவனங்களே தொழிற்பயிற்சியை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா கூமாங்குளம் பகுதியில் வயோதிபர் வாள்வெட்டில் காயம்!

(வவுனியா)

வவுனியா கூமாங்குளம் பகுதியில் வயோதிபர் ஒருவர் இனந்தெரியாதவர்களால் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார். கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.மணியம் (வயது 55) என்ற வயோதிபரே தலையிலும், கழுத்துப் பகுதியிலும் வாள் வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்தார்.

வயோதிபர் தனது வீட்டிலிருந்து பாற்சாலைக்குப் பாலை எடுத்துச்சென்றவேளையிலேயே இனந்தெரியாதவர்களின் வாள்வெட்டுக்கு இலக்கானார். காயமடைந்த வயோதிபர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப் பட்டார். (03)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆதரவில் மாணவருக்கான சமூகநலப்பயிற்சி நெறி

(கிளிநொச்சி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைபபிரிவினரால் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து, சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக எ.எஸ்.பி நிறுவனத்தின் நிதியுதவியுடன் சமூக நலப் பயிற்சிநெறியின் முதற்கட்டம் பாடசாலை ஆசிரியர்களுக்கு கடந்த ஜூன் மாதம் நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக 2 ஆம் கட்ட சமூகநலப் பயிற்சிநெறி பாடசாலை மட்டத்தில் கடந்த 2, 3 ஆம் திகதிகளில் உருத்திரபுரம் வலயத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகியவற்றில் சிறப்பாக நடைபெற்றது.

இந்தப் பயிற்சிநெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்களும் கலந்துகொண்டனர். இந்தப் பயிற்சிநெறியில் முதலுதவி, உடலமைப்பு தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடைமுறைகள் தொடர்பாக பல விரிவுரைகள் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும், சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சிநெறியில் முதலுதவி தொடர்பான கைநூல், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவால் தயாரிக்கப்பட்டு, பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.

இந்தப் பயிற்சியை நிறைவு செய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப் பெட்டிகளும், அதற்கான மருந்துகள், உபகரணங்களும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் இந்தத் திட்டத்தில் வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசாலைகளிலும் பயிற்சி நெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதோடு, பயிற்சியின் நிறைவில் பரீட்சையும், சான்றிதழ் சின்னங்களும் வழங்கும் ஒழுங்கும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால் செய்யப்பட்டது.

# மன்னார் – இலுப்பை கடவைப்பகுதியில் வேகக் கட்டுப்பாட்டைப் பேண நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் - இலுப்பைக் கடவைப் பகுதியில் வீதி வேகக்கட்டுப்பாடு பேணப்படுவது அவசியம் என பொது மக்கள் தரப்பில் கோரிக்கை விடப் பட்டுள்ளது.

இலுப்பைக்கடவை பாடசாலை முன்பாகவுள்ள பிரதான வீதி வளைவுடன் இருப்பதால், அதிவேகமாகச் செல்லும் வாகனங்கள், சைககிள்கள் என்பன கட்டுப்பாட்டை இழக்க நேரிடுகின்றது. இதனால் பாடசாலை மாணவர்கள் விபத்துக்குள்ளாகின்றனர் என பாடசாலை சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே இந்தப் பகுதியில் வீதிக்கட்டுப்பாட்டைப் பேணுவதற்கு சம்பந்தப் பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தேவன்பிட்டி வெள்ளாங்குளம் வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படவில்லை

(மன்னார்)

மன்னார் தேவன்பிட்டி வெள்ளாங்குளம் வீதி மிக நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் படுமோசமாகச் சிதைவடைந்து போயுள்ளது.

தேவன்பிட்டியில் இருந்து வெள்ளாங்குளத்துக்குச் செல்லும் வீதி கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால், மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதுடன் விபத்துக்களையும் சந்திக்க நேரிடுகிறது. இது சம்பந்தமாக உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தும் பயன் எதுவும் கிட்டவில்லை என இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

# பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் கால்நடைகளுக்கான தடுப்பூசி வழங்கல்

(கிளிநொச்சி)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கால்நடை அபிவிருத்தி நிறுவனத்தால ஒட்டுசுட்டான், மாங்குளம் பிரதேசங்களில் கால்நடைகளுக்கான தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டு வருகின்றது.

மாங்குளம், ஒட்டுசுட்டான் பிரதேசங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் பின் அடைப்பான், முன் அடைப்பான் நோய்களுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் கடந்த 16 ஆம் திகதி முதல் நாளைவரை தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெறும் எனவும், கோழிக்கான மருந்துகள் ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் வழங்கப்படும் என தமிழீழ பொருண மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (09)

# துவிச்சக்கரவண்டிகள் அன்பளிப்பு!

கிளிநொச்சி ஊனமுற்ற புனர்வாழ்வுச் சங்கத்தினரால் அண்மையில் ஊனமுற்ற மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் புனர்வாழ்வுச் சங்க இயக்குநர் அருட்சகோதரி லூட்ஸ் ஜோசப் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் 'சோ ஆ' நிறுவனப் பிரதிநிதியும், ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். (9)




## புனரமைப்பு

மன்னார் - கோயில்குளம் கமக்கார அமைப்பின் கீழுள்ள வலுச்சுட்டிக்குளம் புனரமைக்கப்பட்டுவருகின்றது. 2004 ஆம் ஆண்டு உலக உணவுத்திட்டத்தின்கீழ் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் இந்தக்குளம் புனரமைக்கப்பட்டுவருகின்றது.

## சிறப்பு கண்காட்சி

முதல் பெண் மாவீரரான 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும் முன்னிட்டு கிளிநொச்சி மத்திய விளையாட்டுத் திடலில் சிறப்புக் கண்காட்சி ஒன்று இன்று ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 10 ஆம் திகதிவரை இடம்பெறும் இந்தக் கண்காட்சியில் தமிழீழ போராட்ட வரலாற்றில் மகளிர் படையணிகளின் போரியல் வரலாற்றை எடுத்துக்காட்டுகின்ற படைக்கலக் கண்காட்சிகள், போர்க்கருவிகள் உற்பத்திச்சாலை, விடியல் படைவீடு, இராணுவ மருத்துவமனை, சண்டைக்காட்சிகள், சிறப்புக் கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறும்.

# அடிப்படை வசதியின்றி இயங்கும் பூநகரி அரசினர் வைத்தியசாலை!

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி அரசினர் வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் குறைவடைந்து காணப்படுவதுடன், இந்த மருத்துவமனையில் பணியாற்றுவதற்கு வைத்தியர்கள் முன்வரத் தயங்குகின்றனர்.

இதனால் பூநகரி பிரதேச மக்கள் தமது வைத்திய தேவைகளைப் பெறுவதற்கு இங்குள்ள திலீபன் மருத்துவமனைக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் சேவை நலன் கொண்ட மருத்துவர்கள் திலீபன் மருத்துவமனைக்கு வந்து சேவையாற்ற வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.



அண்மையில் வவுனியா பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத் தேர்த் திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர்களைப் படத்தில் காணலாம். (படம்:- கனகரவி)



ஆலய முன்றலில் நடைபெற்ற சொற்பொழிவைக் கேட்க கூடியிருக்கும் பக்தர்களைப் படத்தில் காணலாம். (படம்:- கனகரவி)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
உடையார்முன் இல்லார்போல் ஏக்குஅற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.
திருக்குறள்

# நமது நோக்கு

## நல்லாசான்களை ஆராதிப்போமாக...

இன்று உலக ஆசிரியர் தினம்,

'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற ஔவைப் பிராட்டியின் அர்த்தமுள்ள முதுமொழிக்கு இலக்கணமாகத் திகழும் ஆசிரியப் பெருமக்களை நன்றியுடன் மனதேற்றிக் கௌரவிக்கும் நாள்.

கற்றுத்தேர்ந்து, கலைஞானம் முற்றும் உணர்ந்தவர்களை ஏனையோர்க்கு கற்பிப்பதன்மூலம் அவர்களுக்கு ஞானமூட்டி, உலகை உணர்ந்தவர்களாக்கி, விவேகிகளாக்கி மேன்மையுற வைத்து மேதினியின் எழுச்சிக்கும், உயர்ச்சிக்கும் வழிகாட்டுபவர்களாக விளங்கும் ஆசிரிய சமூகத்தவர்களை ஆராதிக்கும் நாள்.

ஒரு தேசத்தின் எதிர்காலமென்பது, அந்தத் தேசத்தின் எதிர்காலத் தலைமுறையின் அறிவுகள், வளர்ச்சியின் அடிப்படையில் திட்டமிடப்படும் ஒன்றாகும். இளைய தலைமுறையினரின் அறிவு வளர்ச்சி என்பதோ, அவர்களின் நல்லாசிரியர்களின் ஞானமுதிர்ச்சியிலும், ஆசிரியத்தன்மையிலுமே தங்கியுள்ளது. ஒரு நல்லாசிரியனின் பண்புகள் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் அமைந்த, பரந்த -தெளிந்த அறிவின் சீரிய தன்மைகளைக்கொண்டதாக அமைந்திருந்தால் மட்டுமே அவரால் நல்லறிவும், சமூகப் பொறுப்பும், தேசியப் பற்றும் கொண்ட பகுத்தறிவுத்திறன் மிக்க ஒரு தலைமுறையை உருவாக்ககூடியதாக இருக்கும்.

ஆசிரியம் ஒரு தொழில் மட்டுமல்ல...அது ஒரு சமூக மற்றும் தேசியக் கடமையும் கூட....

இந்தக் கடமையை ஆற்றுபவர் தெய்வத்திற்கு சமனாகக் கருதப்படுகிறார்... இதனால்தான் மாதா, பிதா, குரு தெய்வம் எனக்குறிப்பிட்டு தந்தைக்கும், தாய்க்கும் அடுத்த ஸ்தானத்தை குரு எனக்குறிப்பிட்டு ஆசிரியருக்கு வழங்கியுள்ளனர் நம்முன்னோர்கள். இத்தகைய ஆசிரியப் பெருமக்களுக்கு இன்று மாணவர்களும், அவர் தம் பெற்றோர்களும் கௌரவமளித்து பாராட்டும் நாளாக இன்றைய தினத்தை உலகம் பிரகடனம் செய்துள்ளது.

இது மகிழ்ச்சிதரும் விடயமாகும்.

கற்பித்தல் ஒரு அற்புதமான பணி, பொறுப்புமிக்க பணி, அதனை வெறும் தொழிலாக சம்பள உயர்வு, பதவியுயர்வு ஆகியவற்றை இலக்காகவைத்துச் செய்யும் ஒரு வேலையாக மட்டும் கருதுபவர் நல்லாசிரியர் என்ற தகுதிக்கு பொருத்தமானவராக இருக்கவேமுடியாது. அவர் கூலிக்கு வேலைசெய்யும் ஒரு சராசரி உத்தியோகத்தராகவே இருக்கமுடியும்.

எமது தமிழினம் 'கல்வியே கருந்தனம்' என நினைத்து வாழும் ஒரு பாரம்பரியத்தை கொண்டதாகும். தாம்பெறாத - பெற இயலாமல்போன கல்வியென்ற பெருஞ்செல்வத்தை தமது பிள்ளைகள் பெறவேண்டும் என்ற விருப்பார்வத்துடன் எத்துணை கஷ்டம் - நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தபோதும் அவர்களைப் படிப்பிக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் தமிழர்கள்.

'கற்கை நன்றே.... கற்கை நன்றே...பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று தமிழ்ப் புலவன் ஒருவன் எழுதிவைத்துள்ளதை இங்கு நினைவுகூர்தல் பொருத்தமானது.

எமது பெற்றோர்கள் - தமது பிள்ளைகள் குறித்த கனவை நனவாக்கவேண்டிய பொறுப்பை ஆசிரிய சமூகத்திடம்தான் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இங்கேதான் ஆசிரிய சமூகத்தவர்கள் தமது பொறுப்பினை உணர்ந்து செயற்படவேண்டியவர்களாகியுள்ளனர்.

தமிழ்ச் சிறார்களின் கல்வி என்பது கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட கொடியயுத்தத்தின் காரணமாக எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டதென்பதை விளக்கவேண்டிய அவசியமேயில்லை.

தரப்படுத்தலில் ஆரம்பமாகி, யாழ்.நூலக எரிப்பின் போது உச்சக்கட்டத்தை அடைந்து பேரினவாத ஆட்சியினரின் தமிழ் மக்களின் அறிவை சிதைக்கும் நடவடிக்கைகளின் வெறித்தனம் எவ்வளவு கோரமானது என்பது நாகர்கோவில் மாணவர்கள் மீதான விமானத்தாக்குல் ஒரு தெளிவான சாட்சியாகும்.

ஆனால், அழிப்புக்கும், அழிவுக்கும் இடையிலும் நாம் கல்வியை கைவிடவில்லை, கட்டடங்களற்ற காட்டு மரநிழலிலும, வெட்டை வெளியிலும் வெறுந்தரையில் அமர்ந்து க்ல்வி கற்ற மாணவர்களுக்கு நின்றநிலையில் சலிப்பின்றி பொறுப்புடன் கற்பித்த ஆசிரிய சமூகத்தவரை நினைத்து பெருமிதம கொள்வதில் நியாயமிருக்கிறது.

வன்னிப்பிரதேசத்தின் கல்விசார் வளர்ச்சி ஆசிரிய சமூகத்தவரின் பொறுப்புணர்ச்சியின் வெளிப்பாடேயாகும்.

யாழ்.குடாநாட்டில் இராணுவ வலயங்களுக்குள் அச்சமும், பீதியும் நிலவும் சூழலிலும் கற்கமுன்வந்த மாணவர்களுக்கு அச்சுறுத்தல்களுக்கிடையே கற்பிக்க முன்நின்ற ஆசிரியர்கள் வணக்கத்திற்குரியவர்களே...

நாளைய நமது மண்ணின் வரலாற்று நாயகர்களை உருவாக்கும் பணிப்பொறுப்பை, கடமையுணர்வுடன் மேற்கொளளும் அவர்களை ஆராதிக்கவேண்டியது நமது சமூகப் பொறுப்பாகும்.

இந்த நாளில்...உலக ஆசிரியர் தினத்தில் ஆசிரியத் தன்மைக்கு இலக்கணமாக விளங்கும் அனைவருக்கும் நமது வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் அர்ப்பணிப்போமாக....

## நாடும் நடப்பும்




# நிர்வாக சேவை ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவை வகுப்பு II தரம் II க்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை- 2001 ஆம் ஆண்டுக்குப் பொருத்தமான பணியாளர்களிடம் இருந்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்தவருடம் ஜனவரி மாதத்தில் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு, 2001-12-31 ஆம் திகதிக்கு முன்னர் ஐந்து வருட திருப்திகரமான சேவையைப் பூர்த்திசெய்த ஒருவர் விண்ணப்பிக்க முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தில் பரீட்சைக் கட்டணமாக முந்நூறு ரூபாவைச்செலுத்தி, பெறப்பட்ட பற்றுச்சீட்டை இணைத்து, விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்கள தலைவருடாக எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு (நவம்பர் 05) முன்பாக பதிவுத் தபால் மூலம், பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத்திணைக்களம், ஏற்பாடுகள், மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப்பிரிவு, பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களை இந்த மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடமுடியும். (31)

## மாதாந்த உதவிக் கொடுப்பனவுகள் அடுத்த ஆண்டு முதலே அதிகரிக்கும்

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவுகள் யாவும் அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்தே அதிகரிக்கப்படவுள்ளது.

இதில் 'மகாபொல' கொடுப்பனவாக 1750 ரூபாவைப் பெற்றுக் கொள்ளும் மாணவர்களுக்கும் மற்றும் மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் மாணவர்களுக்கும் 250 ரூபா வீதம் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்த அதிகரித்த கொடுப்பனவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இது வருட முற்பகுதியில் இருந்தே அமுலுக்கு வரவிருப்பதாக யாழ்.பல்கலைக்கழக நலச் சேவை இணைப்பதிவாளர் அறிவித்தார்.

## பொலிஸாரின் தாக்குதலில் முகாமையாளர் உயிரிழப்பு

(கொழும்பு)

பொலிஸாரின் தாக்குதலில் பொலநறுவையில் ஹொட்டல் முகாமையாளர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

குறிப்பிட்ட ஹொட்டலில் சட்டவிரோதமாக மதுபான விற்பனை இடம்பெறுவதாகக் கூறி, பொலிஸார் தேடுதல் நடத்தியபோது இடம்பெற்ற வாக்குவாதத்தையடுத்தே பொலிஸார் முகாமையாளரைத் தாக்கியதாக பொலிஸ் தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்டது.

எனினும் மது அருந்த வந்த பொலிஸாரே - அது கிடைக்காததால், முகாமையாளரைத் தாக்கியதாக ஊழியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (01)

# பொலிஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைக்கவேண்டும்

### புதிய பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் மீது பொதுமக்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்று புதிய பொலிஸ் மா அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்ட சந்திரா பெர்னாண்டோ தெரிவித்தார்.

29 ஆவது பொலிஸ் மா அதிபராகப் பதவியேற்ற பின்னர் உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொலிஸார் மக்களின் மனதை வெல்லக்கூடிய வகையில் செயற்படுவதற்குத் தயாராக உள்ளனர். பொலிஸார் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்படும்.

மனித உரிமைகள் தொடர்பான பயிற்சிகளை வழங்குவதற்காக சுவீடன் நாட்டின் - பொலிஸ் ஆணைக்குழுவின் ஆணையாளர் இலங்கை வந்துள்ளார்.

பொலிஸ் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்பட நான் தயாராகவே உள்ளேன். படைகளில் இருந்து தப்பியோடியோரின் கைகளில் ஆயுதங்கள் இருப்பதால்தான், குற்றச் செயல்களின் போது கொலைகள் இடம்பெறுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும அவர் மேலும் தெரிவித்தார். (01)

## 96 பேர் கொண்ட புலிகளின் அணி வன்னியிலிருந்து திருமலைக்கு

(கொழும்பு)

வன்னியிலிருந்து விடுதலைப் புலிகளின் அணியொன்று இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் ஊடாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் பயணத்தை மேற்கொண்டதாகப் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டது.

96 பேர் கொண்ட புலிகளின் அணியே, கடந்த சனிக்கிழமை பிற்பகல் 12.35 மணியளவில் ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் நுழைந்து - அனறு மாலை 6 மணியளவில் திருகோணமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் பிரவேசித்தனர்.

சிரஞ்சீவி தலைமையிலான அணியின் பயணத்துக்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வழித்துணை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூர் விமானக் கட்டணங்கள் அதிகரிப்பதற்கு ஆலோசனை!

(கொழும்பு)

சர்வதேச உள்நாட்டுச் சந்தைகளில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டிருந்ததை அடுத்து, உள்நாட்டு விமான சேவைக்கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய எரிபொருள் விலை அதிகரிப்பதற்கேற்ப சுமார் 2000 ரூபா விலையில் உள்ளூர் விமானக் கட்டணங்கள் அதிகரிப்பதற்கு வாய்ப்புக்கள் இருபதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம், கொக்கல, திருகோணமலை, சிகிரியா ஆகிய இடங்களுக்கு இரத்மலானயிலிருந்து உள்ளூர் விமானசேவை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் தினம்...

த.சுதன்

# ஒரு பிள்ளையை மனிதனாக உருவாக்குபவர் ஆசிரியரே

கல்வி அமைப்பு அதன் தொடக்க காலத்தில் ஆசிரியரை மையமாகவும் அவரது முழுமையான ஆதிக்கத்தின் பிரதிபலிப்பாகவும் காணப்பட்டது. பண்டைய குருகுலக் கல்வி, பழங்காலத்து தமிழர்களது கல்வி, பௌத்தர்களது கல்விமுறை ஆகியவற்றில் ஆசிரியர்கள் சிறந்த புலமை வாய்ந்தவர்களாக இருந்தனர். ஆனால் பலதரப்பட்ட மாணவர்களுக்கு ஏற்ற பல்வேறு பாடங்களும் செயல்களும் கற்பித்தல் முறைகளும் இன்று வலியுறுத்தப்படும் இந்த நிலையில், அறிவு வளர்ச்சியுடன் மாணவர்களது திறன்கள், மனப்பாங்குகள், அழகுணர்வு ஆற்றல், வளர்ச்சிகள் போன்றவையும் கல்வியின் இலக்குகளாக உணரப்பட்டுள்ளன. எனவே இன்று ஆசிரியர்களது பொறுப்புகளும், கடமைகளும் பெருகி இன்று அவர்களது பணி உயர் தொழில் நிலையை அடைந்துள்ளது.

கல்விச் செயலில் கற்போர், கற்பிப்போர் ஆகியோரது இணைந்த பங்கு உணரப்பட்டுள்ளது. இன்று கல்வி கற்கும் மாணவர்களது மையம் இடம் ஏற்கப்பட்ட அதேசமயம், ஆசிரியரது பங்கும், செல்வாக்கும் உணரப்பட்டுள்ள நிலையில், கற்றலைப் பற்றிய இதுவரை ஆராய்ந்து வந்த ஆராய்ச்சியாளர்கள், தற்போது கல்வியை ஆசிரியரின் கற்பித்தல் நோக்கிலும் ஆராய்ந்து கற்பித்தல் பற்றி பல கோட்பாடுகளைக் கூறியுள்ளனர். ஆசிரியரைத் தமது கருத்துக்களை மாணாக்கர்பால் திணிக்க முயலும் எதேச்சாதிகாரி போல் கருதாமல் கற்பித்தல், கற்றல் செயலைத் தூண்டியும், எளிதாக்கியும் உதவ முற்படும் வழிகாட்டி என்று கருதப்படும் நிலை காணப்படுகிறது.

ஆசிரியர்களது கடமைகளும், பொறுப்புக்களும் பலதிறப்பட்டும் எண்ணிக்கையில் பெருகியும் காணப்படுகின்றன. அந்த நிலையில் அன்றாட வகுப்பறைச் செயல்களின் மேலாண்மைப் பொறுப்புக்கள், கற்றலில் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகளைக் கண்டறிந்து, இவற்றைக் களைய உதவும் செயல்களை மாணாக்கர் பின்பற்றி பலனடையத்தக்க நடத்தைக்குகந்தானே ஒரு முன்மாதிரியாகத் திகழவேண்டிய பொறுப்புக்கள் பலவும் கல்வி இலக்குகளை நோக்கி ஒவ்வொரு மாணவரையும் முன்னேற்றிச் செல்லும் பொறுப்புக்கள் என இன்று கற்பித்தலில் உயிர்ப்பூட்டும் சமூகப் பொறுப்புகள் மற்றும் வகை கூறல் ஆகிய பாரிய பொறுப்புக்கள் ஆசிரியருக்கு உண்டு. இதனை மாணவரும், பெற்றோரும் மனம்கொள்ள வேண்டும். ஏனெனில், பொறுப்புக்கள் நிறைந்த ஆசிரியரால் மாத்திரம் கல்வி எனும் தேரை இழுக்க முடியாது. எனவே ஆசிரியர், மாணவர், பெற்றோர் என்போரின் ஒட்டு மொத்த கூட்டு முயற்சியாலேயே கல்வி இலக்கை மாணவர் அடையமுடியும்.

ஒரு ஆசிரியரது பணி மாணவனைத் கற்பித்தலில் ஈடுபடுத்துவதாகும். அவ்வாறு அவனைக் கற்பித்தலில் ஈடுபடுத்த வேண்டுமெனின் கற்பதற்கு ஊக்க மளிக்க வேண்டும். ஆரம்ப வயதுகளில் பிள்ளைகளிடம் ஏற்படும் இயல்பான ஆர்வம், உரிய நற்செயல்கள் ஆகியவற்றிற்கு எளிய முறையில் அளிக்கப் படும் பயிற்சியே கல்வி என பிளேட்டோ கூறுகின்றார். பிள்ளைகளை விளையாட்டுக்களில் ஈடுபடுத்தல், வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் போன்ற பல நுட்பங்களைக் கையாண்டு கற்றலில் மிகவும் ஊக்கமுடையவர்களாக்க முடியும். இன்றும் கல்வியால் தனியாள் விருத்தி எதிர்பார்க்கப்படுகின்றது. தனியாள் விருத்தி எதிர்பார்க்கப்படுவது, நடத்தை விருத்தி மட்டுமன்றி மகிழ்ச்சிகரமான, அதிஷ்டமுள்ள வாழ்கையை நடத்தும் பொருட்டு புத்தியை விருத்தி செய்வதும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுமே' என்று பிரான்சிஸ் பேக்கன் கூறுகின்றார். ஆசிரியர் மகிழ்ச்சியுடன் பிள்ளைகளை இயக்குவதோடு தானும் ஒருவராகச் சேர்ந்து இயங்க வேண்டும். இவற்றோடு தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவனையும் அவதானித்தல் போன்ற சிறப்பான இயல்புகளை கையாளுதலும் பயனுடையதாகும்.

பிள்ளைகள் ஒரே வித மானவர்களாக இருபபின் கற்பித்தல் மிக இலகுவான தாகும். ஆனால், பிள்ளைகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமானவர்களாவர். சில பிள்ளைகளது சுற்றாடல் வறியது. அவர்கள் பாதகமான நிலைமைகளின்கீழ் வழிதவறிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட ஏதுவாக அமையும். எனவே மாணவனது சுற்றாடலை, அவன் அங்கத்துவம் வகிக்கும் சமுதாயத்தை, அத்த கைய சமுதாயம் அவன்மீது தாக்கம் விளைவிக்கும் விதத்தை விளங்கிக் கொள்ளுதல் மிக இன்றியமையாத ஒன்றாகும். எனவே தனது பிள்ளைகளை ஆசிரியர் புரிந்து கொள்வது அவசியம். உடல், உள மன எழுச்சி வளர்ச்சிகளில் மாணவர்களிடம் தனியாள் வேறுபாடு உண்டு என்பதை ஆசிரியர்கள் மனங் கொள்ள வேண்டும். எனவேதான் ஆசிரியரின் இலட்சியத்தில் இருந்தே மாணவரின் வாழ்க் கையானது மலர்கின்றது. இந்த நிலையில் ஆசிரியரது நேரான மனப்பாங்கு மாணவர் மீது இருக்க வேண்டும். இந்த நிலையில் ஓர் ஆசிரியருக்கு,

- ♦ எல்லா மாணவர்களும் ஏதோ ஒரு வகையில் திறமை உடையவர்கள்.
- ♦ எனது மாணவர்கள் எதையும் செய்து முடிக்கும் வல்லமை உடையவர்கள்.
- ♦ எனது மாணவர்களுள் கற்காதவர் என எவரும் இல்லை.

என்ற நிலை, அதாவது 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தாய்..., போல மாணவர் மீது அன்பு செலுத்த வேண்டும்.

பிள்ளைகள் சூழலின் பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகளுக்கு உள்ளான நிலையிலே வகுபறையில் காணப்படுகின்றனர். பரஸ்பர அன்பு செலுத்தும் நிலையை இழந்த குடும்ப உறுப்பினர்கள் வாழ்க்கைப் பாதுகாப்பற்ற அச்சம் தரும் சூழல், பாடப்பரப்பை அளவுக்கு அதிகமாகச் சுமத்தும் பாடசாலைச் சூழல் ஆகியவற்றின் தாக்கத்தால் மாணவர்கள் கற்றலில் அவதியுறுகின்றனர். இந்த நிலையில் மாணவரின் உளநிலையைப் புரிந்து, உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அவர்களின் அவல, நிலையை மாற்றி ஆறுதல்படுத்தும் வகையில் பணியாற்ற வேண்டும். போர்ச்சூழல் மிகவும் பாதகமான மனத்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய உள நிலைகளில் இருந்து மாணவர்களை மகிழ் நிலைக்குக் கொண்டு செல்லாது விடின் உள முரண்பாடு ஏற்பட்டு வன்முறைமிகுந்த சமூகமொன்றாக உருவாகும் நிலை தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடும். எனவே கற்றலில் முழுமையாக மாணவர்களை ஈடுபடுத்தி ஆளுமை விருத்தியை வழங்க வேண்டியது ஆசிரியரது பணியாகும்.

உபநிடதம் என்பது உப+நி+ஸத் எனப் பிரிந்து, குருவுக்கு அருகில் இருந்து சிஷ்யன் பக்தி சிரத்தையுடன் கேட்டல் எனப் பொருள் படும். இது பண்டைய கல்விமுறை. ஆனால், ஆசிரியம் என்பது மாணவருடன் இருந்து அவர்களின் திறன், திறனின்மைகளை ஆராய்ந்து அன்புடனும், ஆதரவுடனும் மகிழ்வான கற்றலுக்குத் துணை புரிவது ஆகும். எனவே இழப்பீடுகளை ஈடுசெய்து நல்லுறவைப் பேணி தாய், சேயாக வளரும் குடும்பமாக அமைய, ஆசிரியர் மாணவர் மனதில் நம்பிக்கை அன்பை ஊட்ட வேண்டும்.

பிள்ளைகளின் பெற்றாரை அடுத்ததாக முக்கியத்துவம் பெறும் தொகுதியினர் ஆசிரியர்களே. ஒரு பிள்ளை உலகில் பிரசன்னமாகியதில் இருந்து அவர்களை வளர்த்து ஆளாக்கும் தாயை அல்லது தந்தையைப் போன்றே ஆசிரியர்களும் பிள்ளைகளை உடல், உள ரீதியாக வளர்த்து ஆளாக்குபவர்களும், கண்காணிப்பவர்களுமாவர். பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர் கொண்டுள்ள இம்மகத்தான பொறுப்பைக் குறிப்பிட 'Low Parentis' என்ற இலத்தீன் சொல் பயன்படுத்தப்படுகின்றது. தமிழில் அதன்பொருள் 'பெற்றோரைப் போன்ற' என்பதாகும். இந்த நிலையில் ஆசிரியர்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் பல உண்டு என்பதை சட்டம் ஏற்றுக் கொள்கிறது. இந்த வகையில் பிள்ளைகள் தொடர்பாக ஆசிரியர்கள் தாம் கொண்டுள்ள சட்டபூர்வமான பொறுப்புக்களினதும் உரிமைகளினதும் தன்மையை அறிந்து செயற்பட வேண்டும் என நீதிபதிகள் பலர் கூறுகின்றனர்.

✡ அவதானமான ஒரு தந்தை தம் பிள்ளையைக் கண்காணிக்கையில் செலுத்தும் கவனத்தைப் போலவே, ஓர் ஆசிரியர் தம் பாடசாலை மாணவர்கள் மட்டில் கவனம் செலுத்தி, அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பை தாங்குபவரேயாவார் என்பதனை நீதிபதி 'ஈசர் பிரபு' இங்கிலாந்தில் நடைபெற்ற 'வில்லியம் எதிர் ஈட்' என்பவரது வழக்கில் தீர்ப்புக் கூறினார்.

✡ நீதிபதி 'பேரி வென் புயுமன்ட்', 'எதிர்சரே' என்ற இங்கிலாந்தில் நடைபெற்ற வழக்கில் வழங்கிய தீர்ப்பு யாதெனில், ஒரு தலைமை ஆசிரியர் தமது பாடநூலை மாணவர்கள் மட்டில் தாம் கொண்டுள்ள சட்டபூர்வமான அவதானிக்கும் பொறுப்பு, ஒரு தந்தை தம் பிள்ளையில் செலுத்தும் நம்பிக்கையான கவனத்தை ஒத்ததாக இருக்கவேண்டும் எனக் கூறினார்.

ஆசிரியரின் பங்கு பாடசாலையுடன் நின்றுவிடுவதில்லை. குறுகிய காலப்பகுதிக்குள்ளும் நீண்ட காலப்பகுதிக்குள்ளும் மனித வளர்ச்சியுடன் தொடர்பு கொண்டுள்ளது. இந்த நிலையில் கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டவர்களையே ஆசிரியர் என்கின்றோம். இருப்பினும் கற்பித்தல் தொழிலை மேற்கொள்கின்ற எல்லோரும் ஆசிரியர்களா என்ற கேள்வி எழுத்தான் செய்கின்றது.

ஆசிரியர் அந்தந்தக் காலப்பகுதியின் தேவைக்கும், நாட்டின் சமுதாயத்தின் இயல்புக்கு அமைவாகவும் பணியாற்ற வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உண்டு. ஆசிரியர்கள் சமுதாய உணர்வுள்ளவர்களாக இருக்கவேண்டும். நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கும் சந்ததியினரை உருவாக்குவதுடன், மக்களுக்கு தலைமைத்துவம் கொடுப்பது தொடர்பாகவும் ஆசிரியர்களுக்கு பாரிய பொறுப்பு உண்டு. எனவே ஒப்படைக்கப்பட்டிருக்கும் பொறுப்புக்களையும், கடமைகளையும், தன்னம்பிக்கையுடனும் சிக்கல் இன்றியும், அமைதியாகவும், ஒத்துழைப்புடனும், திறமையாகவும், வெற்றிகரமாகவும் கடமையாற்றவேண்டும்.

பிள்ளைகள் மனதிலே குடிகொண்டிருக்கும் சோக உணர்வை அகற்ற, ஆசிரியர்கள் தாமே தாயாக நின்று பணி செய்யவேண்டும். தாய் தந்தையரின் அன்பையும், பராமரிப்பையும் இழந்த பிள்ளைகளின் உள்ளங்களிலே தம்மை அரவணைத்து, அன்பு செலுத்த ஆசிரியர் இருக்கின்றார் என்ற நம்பிக்கையை உருவாக்க வேண்டும். ஆசிரியரின் தொழிலில் பொறுப்புணர்ச்சியும், மாணவர் முன்னேற்றத்தில் கரிசனையும் கொண்டு மாணவனிடம் கல்வியில் விருப்பை உண்டு பண்ணும் ஆசிரியரே நல்லாசிரியராவார்.

## நல் ஆசான் யார்?

கல்வியறிவில் நிறைவுபெற்று கற்பித்தலில் நன்கு பயற்சியொரு தன்னிடமுள்ள ஆற்றல்களையறிந்து அவற்றை வளர்த்துக் கொண்டு பூரண அர்ப்பணிப்போடு மாணவர்களுக்கு வழிகாட்டும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

கண்டபடி அடிக்கடி விடுப்பு எடுப்பதை விடுத்து. தினமும் காலக் கிரமத்தை வரையறைவாகக் கடைப்பிடித்துக் கொண்டு, பள்ளிக்குச் சென்று சகோதர ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் ஒன்றிணைந்த வகுப்பறைகளையும் ஏனைய தேவைகளையும் ஆயத்தம் செய்யும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

தான் கற்பிக்க வேண்டிய பாடங்களை முன்னிரவே நன்கு ஆயத்தஞ் செய்த பொருத்தமான உபகரணங்களுடன் மாணவர்கள் விடயங்களை எளிதாகக் கிரகிக்கக்கூடிய வகையில் அவற்றைத் தெளிவாக விளக்கி மாணவர்களின் ஐயங்களைத் தெளிவுபடுத்தும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

'பிறர்பிள்ளை ஊட்டி வளர்க்கத் தன்பிள்ளை தானே வளரும்' என்னும் வருதுவாக்கியத்தை மனதில் இருத்தி மாணவர்கள் அனைவரையும் உயர்வு தாழ்வின்றி சமத்துவமாகப் பராமரிக்கும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

கல்வியில் மட்டுமன்றி அழகியற்கலைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்று அவற்றை மாணவர்களிடையாற்றி விருத்திசெய்யும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

மாணவர்களை வகுப்பறைக்குள் மட்டும் கட்டுப்படுத்தாகல்விச் சுற்றுலாக்களிலும் அவர்களையீடுபடச் செய்து வெளியுலக காட்சிகளிலும் அவர்களின் சிந்தனைகளை வளர்க்கும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குட்டலுறுதி அவசியமென்பதை நன்குணர்ந்து உடற்பயிற்சிகளிலும், விளையாட்டுத்துறைகளிலும் போதிய செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

மாணவர்களுக்கு எதிர்பாராத வகையில் உடனுறு நேருமிடத்து உடனடியாக, விரைவாக, விவேகமாக உரிய நடவடிக்கையெடுத்து மருத்துவ சிகிச்சையை மேற்கொண்ட அவர்களின் பெற்றோருடன் தொடர்பு கொள்பவனே நல்லாசான் ஆவான்.

சமன்செய்து சீதூக்கும் கோல்போல் அமைந்த சமதர்மக் கோட்பாடுகளுடன் மாணவர்களை வழிநடத்தி ஏற்றத்தாழ்வற்ற மாணவ சமுதாயத்தை வளர்க்கும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

தினமும் பாடசாலைகள் ஆரம்பமாகும் போதும் முடிவுறும்போதும் மாணவர்களை இறைவழிபாடுகளில் ஈடுபடச் செய்து அவர்களை ஆன்மநெறியில் வழிநடாத்தும் ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

நற்குண நற்செயல்களைக் கடைப்பிடிப்பதன்மூலம் மாணவருக்கு மேல்வரிச் சட்டமாக, உதாரண புருடனாக விளங்கும் உத்தம ஆசிரியனே நல்லாசான் ஆவான்.

- மாரீசன்

# அறிவொளி ஏற்றும் ஆசிரிய தீபங்கள்

உலகமெங்கணும் ஒரு சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான அடிப்படையாக அமைவது கல்வி. கல்வி என்னும் செயற்பாடு ஒரு மனிதன் முழுமையடைதலுடன், தொடர்புடைய ஒன்று. குறிப்பிட்ட ஒரு துறைபற்றிய தகவல்களையும், விபரங்களையும் சேகரித்துக் கொள்வதும் அத்தகைய சேகரிப்பின் அடிப்படையில் தொடர்ந்து அத்துறைபற்றி அறிந்து கொளவதும் மாத்திரம் கல்வி பெறும் தொழிற்பாட்டுள் அடங்கிவிட மாட்டாது.

கல்வி என்பது ஒரு மனிதனின் அறிவைத் தூண்டிவிடும் காரியமாகும். அறிவை, அறியும் அறிவினைத் தேடிப்போகும் இந்தச் செயற்பாட்டில் குழந்தைகளுக்கும், சிறுவர்களும் வளர்பருவத்தினருக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டிகளாக அமைபவர்கள் ஆசிரியர்கள் ஆவர். ஆசிரியர்கள் வெறும் கற்றுச் சொல்லிகள் அல்லர் நாம் கற்றவற்றை பிறிதொருவருக்கு ஊட்டிவிடுவது மட்டும் கற்பித்தல் எனும் காரியமாகிவிடாது.

கற்றுக் கொள்ளுதல் என்னும் கருமத்தில் ஈடுபடுபவனுடைய அறிவோடு தன்னை தனது இயல்பாற்றல்களை, தனது பலத்தை, தனது பலவீனத்தை அனைத்தையுமே அடையாளம் காணும் திறனைப் பெறவேண்டியவனாக இருக்கின்றான்.

உலகத்தில் உயிர்களுக்குள் உன்னத ஸ்தானத்தில் இருக்கும் மனிதன் தனது அறிவினதும், திறமையினதும் உச்சங்களை அடையாளங்கண்டு காட்டும் போதுதான் அவன யார் என்பதனை அறிந்து கொள்ளமுடிகின்றது. அவனும் தன்னை உணர்ந்து கொள் கின்றான். இவ்வாறாக வெளிச்சத்தை, வழிகாட் டலை, தூண்டலை அவன் ஒரு ஆசிரியரிடமே பெறவேண்டியவனாக இருக்கின்றான். எனவே ஒரு ஆசிரியரின் பணி என்பது மகத்தான பொறுப்புமிக்க, பன்முகத்தன்மை மிக்கதாக இருக்கின்றது என்பதால்தான் ஆசிரியர்களை எமது கலாசார அடிப்படையிலும் மிக உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துப் போற்றுகினறோம்.

மேற்சொன்ன நோக்க அடிப்படையில் பார்க்கும் போது, எமது தமிழ் மண்ணின் ஆசிரியர் பணி மிகவும் கடினமானதாகவே அமைவதனை நாம் புரிந்துகொள்ளுதல் வேணடும். ஒரு ஸ்திரமற்ற அரசியல் வாழ்வின சாதாரண வாழ்வே அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் நிலையில் விடுதலை வேண்டிப் போராடும் ஒரு இனத்து மாணவர்களை வழிப் படுத்தும் பொறுப்பிலுள்ள ஆசிரியர்களின் பொறுப்பும், அவர்கள் நிற்கவேண்டிய தெளிவும் உறுதியும் மிகப்பெரியனவாகவுள்ளன.

முதலில் ஆசிரியர்கள் எமது இன்றைய நிலை குறித்து மிகுந்த தெளிவுடையவர்களாக இருப்பது யதார்த்தப்படுகிறது. மாணவர்கள் கற்றுக் கொள்ளவேண்டிய பாட அறிவோடு வாழ்வு பற்றிய தெளிவையும் பெறவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே அதனை தெளிந்து தெரிவிக்கும் பணி ஆசிரியர்களினுடையதாய் அமைகிறது. சாதாரணமாக எமது அன்றாட வாழ்க்கையில் ஆசிரியர்களுடன் பேசிப் பார்த்தால், தமது பணியில் உள்ள சிரமங்களை எடுத்துப் பேசுபவர்களாக இருப்பதனை அவதானிக்க முடிகிறது. ஆமாம், அவர்களுடைய பணிமிகவும் சிரமமானதுதான். தற்போது அறிமுகமாகியிருக்கின்ற கல்வி முறை இன்னுமின்னும் அவர்களுக்கு சுமையினையும், வேலைப் பளுவினையும் அதிகரித்துள்ளது. இதைமறுப்பதற்கில்லை. அதேநேரம் சிரமம் பாராமல் தமது கடமைகளின் அம்சமாக அவர்கள் தமது தெளிவை மாணவர்களோடு பகிர்ந்து இன்று எமது வாழ்விருக்கும் நிலையை எமது இளைய தலைமுறை எதிர்கொள்ளும் போதும் வாழ்க்கைபற்றிய விளக்கத்தையும் வழங்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்று எமது வாழ்க்கை ஒரு நிச்சயமற்ற அமைதியில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. எந்த நிமிடம் எது நடக்குமோ என்று அறியாத சூழல் இந்த நிலையில் எமது சமூக வாழ்வு எப்படியிருக்கிறது.

கிடைக்கின்ற இந்த அமைதியில் ஆற்றி முடிக்க வேண்டிய பணிகள் சமூக அடிப்படையிலேயே நிறைய உள்ளபோது, நமது சமூகம் குறிப்பாக மாணவர் சமூகம் ஒரு உறுதியற்ற, தெளிவற்ற வாழ்க்கையை மேற்கொண்டு உள்ளது. கேளிக்கை கொண்டாடடம் என்று அவர்களது கவனம் சிதைந்துள்ளது. படிப்பைப் புறக்கணித்து தொலைக்காட்சி பார்ப்பதென வீணாய் பொழுதுபோக்கும் ஒரு பொறுப்பற்ற கூட்டம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில் அவர்களின் முன் இருக்கும் பணிபற்றிய தெளிவினையும் அவர்களுக்கு ஊட்ட வேண்டும். கல்விபற்றிய தெளிவை எதிர்காலம் பற்றிய எச்சரிக்கையை நாம் பெறவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இத்தகைய தெளிவை ஊட்ட வேணடியவர்கள் ஆசிரியர்களே. இன்றைய மாணவரின் கவனத்தைத் திசைதிருப்பி கல்வியும், வாசிப்பும் ஆளுமை உருவாக்கமும் எத்தனை முக கியமானதென்பதை உணர்த்தவேண்டும்.

விளக்குகள் எனக் கருதப்படும் எமது ஆசிரிய மணிகள் ஓயாது ஒலிக்கவேண்டிய காலம் இது. இருள் அகற்றி ஒளி பரப்பி இளைய தலைமுறையை சரியான வழிநடத்தலில் இட்டுச்செல்ல எமது அன்பான ஆசிரியர்கள் முன்வரல் வேண்டும்.

தமிழ் மாணவர் ஒன்றியம்

## பதவி வெற்றிடங்கள்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனர்நிர்மாண புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருக்கும் பிரபல அரச சார்பற்ற தொண்டர் ஸ்தாபனமொன்றிற்கு கீழ்வரும் உத்தியோகத்தர்களுக்கான உடனடி வேலைவாய்ப்புக்கள் உண்டு.

1. கள உத்தியோகத்தர் - (Field Officer)
2. தொழில்நுட்ப உத்தியோகத்தர் - (Civil)
3. சமூக உணர்வூட்டாளர்

விண்ணப்பங்கள் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு (15.10.2004) முன் சகல சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். தென்மராட்சி, நல்லூர் விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
விளம்பர இலக்கம் - 34
C/O நமது ஈழநாடு
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3219)


# அமெரிக்காவைச் சேர்ந்த இருவருக்கு மருத்துவத்துக்கான நோபல் பரிசு!



அமெரிக்காவைச் சேர்ந்த தரிச்சர்ட் ஆக்சல், லிண்டா பி.பக் ஆகியோர் மருத்துவத்துக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

சுவீடனில் ஸ்டாக்ஹோம் நகரில் உள்ள கரோலின்ஸ்கா நிறுவனத்தில் அமைந்துள்ள நோபல் அசெம்பலி 2004 ஆண்டுக்காண மருத்துவ நோபல் பரிசு பெற்றவர்களின் விபரங்களை நேற்று முன்தினம் அறிவித்தது.

மனிதர்களின் கரும் சக்தி குறித்த மரபணு சோதனைக்காக நியூயோர்க்கிலுள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தின் ஹோவாட் ஹியூகிஸ் மருத்துவ மையத்தில் பணியாற்றும் ரிச்சர்ட் ஆக்சல் (58) மற்றும் வொஷிங்டனிலுள்ள யாட்டில் நகரில் பிரிட் ஹாட்சின் புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் லிண்டாபி.பக் (57) ஆகிய இருவருக்கும் மருத்துவத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் நுண்வேதியியல், மூலக்கூறு கண் இயற்பியல்துறை மற்றும் நோயியல் துறையின் பேராசிரியராக ரிச்சர்ட் ஆக்சல் உள்ளார். உணர்வு பற்றிய தகவல்கள் எப்படிப் பெறப்படுகிறது அவை வடிகட்டப்பட்டு எப்படி மனித மூளையால் புரிந்து கொள்ளப்படுகிறது என்ற ஆராய்ச்சித்துறையில் சிறப்பு நிபுணத்துவம் பெற்றுள்ளார்.

அமெரிக்க தேசிய அறிவியல் அக்கடமியின் உறுபபினரான லிண்டா பி.பக் குட்டி போட்டு பாலூட்டும் விலங்கினங்கள் எப்படிக் கண்டுபிடிக்கின்றன, பல்வேறுபட்ட நறுமணங்களை எப்படி வேறுபடுத்திப் பார்க்கின்றன, அவற்றை பெறும் விலங்கினங்களின் மூளை எவ்வாறு கருத்தைப் பெற்றுக்கொண்டு செயற்படுகின்றன என்பது தொடர்பான ஆராய்ச்சியில் சிறப்பான சாதனை படைத்தார்.

மருத்துவத்திற்கான நோபல் பரிசுக்கு 16 கோடியே 11 லட்சம் ரூபாய் வழங்கப்படும். மேலும், கடந்த



1991ஆம் ஆண்டு இரண்டு பேரும் இணைந்து வெளியிட்ட கட்டுரைக்குச் சிறப்பு அந்தஸ்தும் வழங்கப்படும்.

# இத்தாலிக்கு சென்றவர்களின் படகு கவிழ்ந்து 64 பேர் பலி!

டுனிஷியாவில் இருந்து சிறிய படகு மூலம் கடல்வழியாக திருட்டுத்தனமாக இத்தாலி சென்றவேளை இடையில் படகு கவிழ்ந்து 64 பேர் கடலில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

டுனிஷியாவிலிருந்து சிறிய படகொன்றின் மூலம் 75 பேர் இத்தாலிக்கு திருட்டுத்தனமாகச் சென்றனர். இவர்களில் 70 பேர் மொரோக்கோ நட்டையும், ஐவர் டுனிஷியா நாட்டையும் சேர்ந்தவர்களாவர்.

இவ்வாறு இவர்கள் சென்ற படகு கடலில் மூழ்கியதால் 64 பேர் உயிரிழந்தனர். ஏனையோர் டுனிஷிய கடலோர காவல்துறையால் மீட்கப்பட்டனர்.




## உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு

# ஆசிரியர்களுக்கு இடையே நடைபெற்ற எழுத்தாக்கத்திறன் போட்டி முடிவுகள்!

(யாழ்ப்பாணம்)

தமிழ் கல்வி மேம்பாட்டுப் பேரவை வட - கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களத்துடன் இணைந்து ஆசிரியர்களிடையே நடத்திய தமிழ் மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வு முடிவுகள் வெளிவந்துள்ளன.

உலக ஆசிரியர் நாளையொட்டி நடத்தப்பட்ட இந்தத் தேர்வில் தேசிய மட்டத்தில் முதல் 5 இடங் களையும் பெற்றவர்களுக்கு வெற் றிப் பதக்கம், பாராட்டுச் சான்றிதழ் என்பவற்றோடு 5 ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படவிருக்கின்றன.

வலய மட்டங்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும் ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படவிருக்கின்றன. இந்தப்பரிசுகளை தமிழ் வளர்ச்சிக்கழகம் வழங்கவுள்ளது.

### பட்டிருப்பு-வலயம்

முதலாம் இடம் : திருமதி கி. சிவஞானம் (கோட்டைக்கல்லாறு ம.வி).

### பதுளை-வலயம்

இரண்டாம் இடம் : மு.இந்திர குமார் (பதுளை சரஸ்வதி க.வி).

### மட்டக்களப்பு-வலயம்

மூன்றாம் இடம் : எஸ்.சந்திர மோகன் (கிரான்குளம் விநாயகர் ம.வி).

### தென்மராட்சி-வலயம்

நான்காம் இடம் : திருமதி வித்தியாதேவி மனோகரன் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி).

### மடு - வலயம்

நான்காம் இடம் : செ.ப.விமலதாஸ் (கருங்கண்டல் றோ.க.ம.வி).

தமிழ் மொழித்திறன் எழுத்தாக்கத்திறன் தேர்வு வலய மட்டத்தில் பரிசு பெறுவோர் விபரம் -

### மட்டக்களப்பு-வலயம்

முதலாம் இடம் :செ.சிவானந்த தேவன் (புதூர் விக்கினேஸ்வரா வித்தியாலயம்).

திருமதி.தி.ஹரிதாஸ் (சிவானந்த வித்தியாலயம்).

மூன்றாம் இடம் : சு.பூபாலசிங்கம் (கிரான்குளம் விநாயகர் ம.வி).

### பட்டிருப்பு-வலயம்

முதலாம் இடம் : மு.தயாநிதி (முதலைக்குடா ம.வி).

தா.கோபாலகிருஷ்ணன் (குருமண்வெளி சிவசக்தி ம.வி).

க.பிரபாகரன் (திருப்பழுகாமம் கண்டுமணல் ம.வி)

### கல்குடா-வலயம்

முதலாம் இடம் : ஜனாப் எம். ஏ.எம்.எச்.இஸ்மால் (அந்தூர் ம.வி).

இரண்டாம் இடம் : முத்துராமன் சுந்தரம் (கிரான் ம.வி).

எல்.ரீ.எம். சாதிக்கீன் (அந்தூர் ம.வி). இ.சதானந்தம் (கலைமகள் வித்தியாலயம்).

### அக்கரைப்பற்று - வலயம்

முதலாம் இடம் : இ.சதானந்தம் (கலைமகள் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் : து.யோகநாதன் (இராம கிருஷ்ணமிசன் வித்தியாலயம்).

மூன்றாம் இடம் : மு.ஜெயானந்தமூர்த்தி (தம்பிலுவில் ம.ம.வி).

### கல்முனை - வலயம்

முதலாம் இடம் : வி. சதாசிவம் சோதீஸ்வரி (இராமகிருஷ்ணசபை பெண்கள் கல்லூரி).

### சம்மாந்துறை-வலயம்

முதலாம் இடம் : பிள்ளையான் தம்பி யோகராசா (ராணமடு இந்து ம.வி).

இரண்டாம் இடம் : கண்ணப்பன் கிருபாலட்சுமி (ராணமடு இந்து ம.வி).

### திருகோணமலை - வலயம்

முதலாம் இடம் : ஜெயதாசன் மதிவதனி (பாரதி தமிழ் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் : ஏ.வீ.ஏ. கிருபாகரன் (புனித மேரிக் கல்லூரி).

திருமதி.ஞா.தனபாலசிங்கம் (புதுக்குடியிருப்பு அ.த.க பள்ளி).

### மூதூர்-வலயம்

முதலாம் இடம் : மு.மோகனேந்திரன் (ஈச்சந்தீவு விபுலானந்த வித்தியாலயம்).

இரண்டாம் இடம் : றெ.சதாத். (வான் எல புகாரி வித்தியாலயம்).

மூன்றாம் இடம் : ஏ.சீ.தௌபீக் (கிண்ணியா மத்திய கல்லூரி).

### வவுனியா தெற்கு - வலயம்

முதலாம் இடம் : அ.றகுமத்துல்லா (மதீனா வித்தியாலயம்).

இரண்டாம் இடம் : திருமதி. நெ.அன்ரனிகுரூஸ் (செட்டிகுளம் ம.வி).

மூன்றாம் இடம் : சுஜீவா (வவுனியா தமிழ் மத்திய ம.வி).

### வவுனியா வடக்கு- வலயம்

முதலாம் இடம் : திருமதி. இ. தெய்வேந்திரன் (புதுக்குளம். ம.வி).

### மன்னார் - வலயம்

முதலாம் இடம் : ப.பி.றெஜினா சந்தியோகுலோகு (புனித.பாத்திமா ம.வி).

இரண்டாம் இடம் : திருமதி. ஜெ.யூ.யூட்மிராண்டா (புனித.பாத்திமா ம.வி).

மூன்றாம் இடம் : திருமதி. ஆர். ராமதாஸ் (புனித.லூசியா ம.வி).

### மடு - வலயம்

முதலாம் இடம் : சகாயம்மா ஞானப்பிரகாசம் (அடம்பன்.ம.வி).

இரண்டாம் இடம் : கிஹவின் றோஸ் கிறிஸ்தோபர் (தேவன்பிட்டி றோ.க.த. பள்ளி).

### முல்லைத்தீவு-வலயம்

முதலாம் இடம் : த.மேரிசுசி (முல்லைத்தீவு ம.வி).

இரண்டாம் இடம் : சி.ஜெயகாந்த் (பாரதி வித்தியாலயம்).

அ.விமலதாஸ் (கொக்கிளாய் அ.த.க பள்ளி).

### துணுக்காய் - வலயம்

க.முருகேசு (வவுனிக்குளம், படிவம்-4).

இரண்டாம் இடம் : ஜெ.தவநேசன் (மல்லாவி மத்திய கல்லூரி).

### கிளிநொச்சி - வலயம்

முதலாம் இடம் : திருமதி. செ. இராஜரட் ணம் (கிளி.தருமபுரம் ம.வி).

இரண்டாம் இடம் : கணபதிப்பிள்ளை குணரட்ணம் (கிளி.வேரவில் இந்து ம.வி).

மூன்றாம் இடம் : கயிலாயபிள்ளை ரஞ்சிதமலர் (கிளி. மாசார் அ.த.க பள்ளி).

### யாழ்ப்பாண - வலயம்

முதலாம் இடம் : சத்தியவாணி செபமாலைதாசன் (பெரியபுலம் ம.வி).

இரண்டாம் இடம் : சி.தங்கரூபன் (புனித.பத்திரிசியார் கல்லூரி).

மூன்றாம் இடம் : ஜோசப் ஜோன்சன் ராஜ்குமார் (திருக்குடும்ப கன்னியர் மடம்).

### வலிகாமம் - வலயம்

முதலாம் இடம் : சு.சிறீகுமரன் (ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் : பூ.ஜெயமலர் (விக்டோரியாக் கல்லூரி).

த.தயானந்தன் (இளவாலை மெய்கண்டான் ம.வி).

### தீவக - வலயம்

முதலாம் இடம் : க.விஜிதா (கரம்பொன் சிறியபுஸ்பம் மகளிர் ம.வி).

### மாத்தறை - வலயம்

முதலாம் இடம் : எம்.ஐ.எம். நவ்லி (மாறை/தாருல் உலூம் ம.வி).

### அக்குரஸ்ச - வலயம்

முதலாம் இடம் : எம்.எஸ்.பஸ்லி ஸாலிற் (மாறை அஸ்ஸபா கனிஷ்ட வித்தியாலயம்).

### தங்காலை - வலயம்

முதலாம் இடம் : எம்.ஏ.எஸ். ஸனூலா (தங்காலை முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயம்).

### அம்பாந்தோட்டை - வலயம்

முதலாம் இடம் : எஸ்.நஸீரா ஸக்கீம் (ஸாஹிரா தேசிய பள்ளி).

இரண்டாம் இடம் : எம்.எம்.எம். பௌஸ்டீஸ் (எம்.ஆர்.தாஸம் கனிஷ்ட வித்தியாலயம்).

### தென்மராட்சி-வலயம்

முதலாம் இடம் : திருமதி. மாலினிதேவி முத்துலிங்கம் (மிருசுவில் அ.த.க.).

திருமதி.தேவராணி நாகராசா (மட்டுவில் தெற்கு அ.மி. த.க.பள்ளி).

மூன்றாம் இடம் : திருமதி மஞ்சுளாதேவி மகேசன் (வீரசிங்கம் ம.வி மீசாலை).

### வடமராட்சி - வலயம்

முதலாம் இடம் : நடராசா தேவராசா (உடுத்துறை ம.வி).

### கண்டி - வலயம்

முதலாம் இடம் : திருமதி குமுதினி இரவீந்திரன் (க.தலாத்து ஓயா தமிழ் ம.வி).

திருமதி.ச.அருணாச்சலம் (க. விவேகானந்த தமிழ் ம.வி).

மூன்றாம் இடம் : திருமதி. சு.சிவமூர்த்தி (க.விவேகானந்த தமிழ் ம.வி).

### நாவுல - வலயம்

முதலாம் இடம்: வை.சரவணமுத்து (கம்மடுவ தமிழ் ம.வி).

இரண்டாம் இடம் : நல்லையா பிரேமகுமார் (கம்மடுவ தமிழ் வித்தியாலயம்).

### நுவரெலியா - வலயம்

முதலாம் இடம் : செல்வி. சு.யோகராணியம்மாள் (டெஸ்போட் த.வி நானு ஓயா)

இரண்டாம் இடம் : திருமதி.சு. திருவனம் (டெஸ்போட் த.வி நானு ஓயா).

மூன்றாம் இடம் : ம.உதயகுமார் (பேர்ஹாம் த.வி தலவாக்கல).

### கம்பளை - வலயம்

முதலாம் இடம் : ரி.சந்திர வதனி (கதிரேசன் மத்தியகல்லூரி),

இரண்டம் இடம் : பி.குணசேகரன் (விகடன் தமிழ் வித்தியாலயம்).

மூன்றாம் இடம் : கந்தையா கீதாஞ்சலி (முத்துமாரி அம்மன் தமிழ் வித்தியாலயம்).

### கொத்மலை - வலயம்

முதலாம் இடம் : துரைசாமி நடராசா (றஸ்புறுக் தமிழ் வித்தியாலயம்).

திருமதி.சற்.வி.ஸக்கிரிய (அல் அரபா முஸ்லிம் வித்தியாலயம்).

மூன்றாம் இடம் : பி.சுசிலா (சீன் வித்தியாலயம்).

### ஹற்றன் - வலயம்

முதலாம் இடம் : பி.சங்கர் (எல்டொப்ஸ் தமிழ் வித்தியாலயம்).

இரண்டாம் இடம் : மு.அகிலன் (புலியாவத்தை தமிழ் வித்தியாலயம் டிக்கோயா),.

திருமதி.எஸ்.தியாகராஜா (ஹைலன் கல்லூரி).

### காலி - வலயம்

முதலாம் இடம் : வி.எல்.எம். எம்.ஹாயிரா (மழ்ஹ றுல்ஸு"ல்ஹியா தே.பள்ளி).

இரண்டாம் இடம் : எம்.எச். எவ். நுஸ்கியா (உஸ்வதுன் ஹஸனா மகாவித்தியாலயம்).

மூன்றாம் இடம் : எஸ்.சி.என். நசீறா (ஸாஹிரா தே.பள்ளி).

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மகளிர் படையணியினர் நடத்தும் கண்காட்சி நிகழ்வு இன்று ஆரம்பம்!

(கிளிநொச்சி)

இரண்டாம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவு நாளையும், தமிழீழ பெண்கள் எழுச்சிநாளையும் முன்னிட்டு, விடுதலைப் புலிகளின் மகளிர் படையணி நடத்தும் கண்காட்சி நிகழ்வுகளும் கலை நிகழ்வுகளும் இனறு காலை 9 மணிக்கு கிளிநொச்சி மத்திய மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிகழ்வுகள் இன்றுமுதல் எதிர்வரும் 10 திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

இன்றைய நிகழ்வுகள் - பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகின்றன.

அதனைத் தொடர்ந்து 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் திருவுருவப்படத்திற்கு அவரது தந்தையார் பேதுருப்பிள்ளை மலர்மாலை அணிவிப்பார்.

பின்னர், ஆயுதக் கண்காட்சியகம், மகளிர் படையணியின் காட்சியகம், போரியற் புகைப்படக் காட்சியகம், தமிழீழ மாதிரிப்பணிமனை, விடுதலைப் புலிகளின் மாதிரி மருத்துவமனை, விடியல் படைவீடு, மாவீரர் நினைவு மண்டபம் என்பன வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளன.

மாலை 6.30 மணிக்கு மகளிர் படையணியின் போரியல் வரலாற்றைச் சித்தரிக்கும் அக்கினிப் பறவைகள் பாகம் 1 ஒளிநாடா திரையிடப்படவுள்ளது.

இரவு 7.30 மணிக்கு செஞ்சோலை மாணவிகளின் கலை நிகழ்வுகள், பெண் நாதஸ்வரக் கலைஞர்களின் நாதஸ்வர இசைநிகழ்வும், சோதியா படையணி வழங்கும் சிறப்புக் சண்டைக் காட்சி என்பன இடம்பெறவுள்ளன்.

## கூட்டுறவுச் சங்கங்களில் கோதுமை மா விலை நிர்ணயம்!

குடாநாட்டிலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனை செய்யப்படும் மாவின் விலையினை யாழ் மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நிர்ணயம் செய்துள்ளது.

குடாநாட்டு சந்தைகளில் மாவின் விலை அதிகரித்து காணப்படுவதை அடுத்து பாவனையாளர்களின் நலன் கருதி இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக சமாசம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பச்சைநிறவியாபாரக் குறியுள்ள மூடையில் கிலோ ஒன்றிற்கு சில்லறை விலையாக 23ரூபா 50 சதமாகவும்

சிவப்பு நிறமுள்ள மாமூடையின் சில்லறைவிலை 27 ரூபாவாகவும் விற்பனைசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேவையானஅளவு மா பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அடுத்து, தலைவர் பொதுமுகாமையாளர்களுக்கான மாநாட்டில் விலைநிர்ணயம் செய்யும் வரை மேற்படி விலை நடைமுறையில் இருக்கும் என யாழ் மாவட்ட விவசாயநுகர்ச்சி கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ப.கனகலிங்கம் தெரிவித்தர்.

## கப்பல் கட்டும் நிறுவனங்களின் தலைவர் கொழும்புக்கு விஜயம்!

இங்கிலாந்தை தலைமையகமாகக் கொண்டியங்கும் கப்பல்கள் தயாரிக்கும் நிறுவனத்தின் தலைவரான பிலிப அண்டர்சன் நேற்று கொழும்பை வந்தடைந்தார்

கூட்டுப்படைகளின் தளபதியும், கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் அழைப்பின் பேரிலேயே இவர் கொழும்பு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கப்பல் தயாரிக்கும் நிறுவனத்தின் இலங்கைக் கிளைக்கான தலைவராகவும் தயா சந்தகிரி இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் - பேசாலை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 25 இந்திய மீனவர்கள் கைது!

(மன்னார்)

மன்னார் தெற்கு பேசாலை கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் அத்துமீறி மீன்பிடித்த 25 இந்திய மீனவர்கள் நேற்றுமுனதினமிரவு கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

5 இழுவைப் படகுகளில் மீன்பிடித்துக கொண்டிருந்த இவர்களை கடற்படையினரின் ரோந்துப் பிரிவினர் கைது செய்து தலைமன்னார் பொலிஸில் ஒப்படைத்தனர்.

இந்த மீனவர்கள் நேற்று மாலை மன்னார் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படபோது எதிர்வரும் 19 ஆம் திகதி வரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

## பன்னிரு வேங்கைகள் நினைவுநாள்...

அங்கு பன்னிரு வேங்கைகளினதும் நினைவுத்தூபிகளில் போராளிகளால் எடுத்துவரப்பட்ட திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டன.

தொடர்ந்து பன்னிரு வேங்கைகளுக்கும் இரு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம், யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் அருணன் ஆகியோர் ஏற்றினர்.

இதையடுத்து தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.தயா ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பன்னிரு வேங்கைகளின் திருவுருவப்படங்களுக்கு உறவினர்கள் ஈகச்சுடரேற்றி, மலர்மாலை அணிவித்தனர். அங்கு வந்திருந்தோரும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

இரவு 7 மணிக்கு ஆரம்பமான அரங்க நிகழ்வுகளின் முதல் நிகழ்வாக வரவேற்பு நடனம் நடைபெற்றது. தொடர்ந்து கருத்துரைகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ப,சீ,12)

## யுவதியுடன்...

சென்று சம்பவம் தொடர்பாக உரிமையாளரிடம் கேட்டபோது அந்தப் பகுதியில் உள்ள முஸ்லீம் வர்த்தகர்கள் ஒன்று சேர்ந்து யுவதியின் உறவினரைத் தாக்கமுற்பட்டனர்.

இதனை அடுத்து அந்தப் பகுதியில் காணப்பட்ட பொதுமக்கள் ஒன்றிணைந்து குறிப்பிட்ட வர்த்தக நிலைய உரிமையாளரை நையப்புடைத்ததுடன் வர்த்தக நிலையத்தையும் அடித்து நொருக்கினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற அரசியற்துறையினர் வன்முறைகளில் ஈடுபடவேண்டாம் என இருதரப்புக்கும் கோரிக்கை விடுத்தனர். (03)

## செஞ்சிலுவை..

குறித்து கலந்துரையாடப்பட்டது

இதேவேளை தாயகத்திலிருந்து சென்ற மனிதஉரிமை அமைப்புப் பிரதிநிதிகளுக்கும் சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளரான ஹரிஜின் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தினர்.

சுவிற்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள நோர்வே பணியகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றுள்ளது..

## இராணுவம்..

ஆனால், நேற்று போர்நிறுத்த கண்காணிப்புக் குழு தரப்பிலிருந்து வெளியிடப்பட்ட தகவலின்படி ஏற்கனவே தீர்மானித்தபடி இந்த சந்திப்பு இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டது.

## ஓமடியாமடுவில்...

தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

நேற்றுமுன்திம் இரவு அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுதபாணிகள் அவர்மீது - துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டுச் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

கொல்லப்பட்டவரின் சடலம் நேற்றுமுன்தினமிரவு உறவினரால் வாழைசசேனை வைத்தியசாலையில் ஒப்படைகக்கப்படடது.

## தடுப்புக் காவலில்..

கணகாணிப்புக்குழுவின் தலைவர் ட்ரொன் புறுாவ் ஹொவ்டே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தை நேற்றுமுன்தினம் சந்தித்து இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

இவர்களை விடுவிப்பதற்காக தமது 10 பேரை விடுவிக்கவேண்டுமென விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். ஆனால், இந்த விடயம் நீதிமன்ற சட்டத்துக்குள் உட்பட்டதாகும்.

ஊர்காவல் படையினர், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஆயுதங்களுடன் பிடிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தொடர்ந்து ஈடுபட்டுவருகிறது.

அப்படியிருந்தும், திருகோணமலையிலுள்ள அமைப்பொன்று இந்த விவகாரத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் பொறுப்பற்ற முறையில் நடந்து வருகிறது.

ஊர்காவல்படையினர் தொடர்பாக விடுதலைப் புலிகள் எடுத்துள்ள முடிவை மீளாய்வு செய்யவேண்டும். திருகோணமலையில் - சம்பந்தப்பட்ட அந்த அமைப்பு தங்கள் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யவேண்டும் என அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# சமாதான முன்னெடுப்புக்களில் புலிகள்....

பொறுப்பாளர் பா.நடேசன், நீதி-நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மகளிர் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தமிழ்விழி, சமாதான செயலக துணைப் பொறுப்பாளர் செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச்சந்திப்பின்போது சமாதான முன்னெடுப்புக்கள் இல்லாத சூழ்நிலையிலும் விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பாக, தாம் மகிழ்ச்சியடைவதாக விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த அரசியற்துறைப்பொறுப்பாளர், சு.ப.தமிழ்ச்செல்வன் -

சமாதான நடவடிக்கைகள் அரசால் முடக்கப்பட்டு சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படாத சூழலிலும், விடுதலைப் புலிகள் அதற்கான முயற்சிகளில் உறுதியாக செயற்படுகின்றனர்.

சமாதான நடவடிக்கைகளில், நோர்வேயை இலங்கை அரசு ஓரம் தள்ளி அவமதிப்புக்குட்படுத்தி வருகின்ற சூழலிலும் நோர்வே தொடர்ந்து இதற்கு ஆதரவினை அளிப்பது பாராட்டுக்குரியது எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக் குறித்து அவர். பி.பி.சிக்குத் தெரிவிக்கையில் -

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஜனாதிபதி சந்திரிகா ஆர்வமாக இருப்பதாக நோர்வே தரப்பினர் எங்களிடம் தெரிவித்தனர்.

அதற்கு நாங்கள் - வாயளவில், பேச்சளவில் மட்டும் இருக்காது செயலளவில் ஜனாதிபதியும் அரசாங்கமும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எமது மக்களுடைய, எமது தலைமைப்பீடத்தினுடைய எதிர்பார்ப்பை நோர்வே தரப்புக்கு வெளியிட்டிருக்கிறோம் என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கிறதே தவிர, பேச்சு மேசைக்கு வருவதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் ஜனாதிபதியின் தரப்பிலிருந்தோ, அரசாங்கத் தரப்பிலிருந்தோ முன்னெடுக்கப்படவில்லை என்பதை அவரிடம் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

கிழக்கில் இடம்பெறும் அரசியல் படுகொலைகள் சம்பந்தமாக நோர்வே தரப்பு தங்களுடைய கரிசனையை வெளிப்படுத்தியிருந்தார்கள். எங்களைப் பொறுத்தவரையில் ஏற்கனவே கண்காணிப்புக்குழுத் தலைவரிடமும், நோர்வே அனுசரணையாளர்களிடமும் தொடர்ச்சியாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம்.

வடக்கு - கிழக்கில் ஆயுதக்குழுக்கள் செயற்படுவதை நிறுத்தவேண்டும். முக்கியமாக யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஒரு சரத்து இருக்கிறது. 1.8 என்ற என்ற பகுதியில் மிகத் தெளிவாக வடக்கு - கிழக்கிலே செயற்படுகின்ற ஆயுதக்குழுக்களுடைய ஆயுதங்கள் களையப்படவேண்டும். அத்துடன் அவர்கள் கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் எம்மால் வெளியேற்றப்பட்ட கருணாவின் அடியாட்கள் சிலரை வைத்துக்கொண்டு, ஈ.பி. டி.பி. குழுவினரோடு இணைந்து இந்த இரு குழுவும் வடக்கு - கிழக்கில் யுத்தநிறுத்த சூழலை சீர்குலைக்கும் நோக்கோடு - அமைதி, சமாதான முயற்சிகளை ஸ்தம்பிக்க வைக்கும் முகமாகச் செயற்பட்டு வருகின்றது.

இராணுவ புலனாய்வு அமைப்புகளுடைய ஆதரவோடு எமது பகுதிகளுக்குள் ஊடுருவி சில தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள். இதற்கான ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன.

இவற்றை நிறுத்தினால், அங்கு நடக்கும் கொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கலாம். யுத்த நிறுத்த உடன்படிக்கையில் தெளிவாக இரண்டு தரப்பும் ஏற்றுக்கொண்ட ஒரு தரப்பு என்ற வகையில் இது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

இதற்கு விடுதலைப் புலிகள் ஆதரவும், ஒத்துழைப்பும் தரத் தயாராகவிருக்கிறது. அங்கே எங்கள் மீது தொடுக்கப்படுகின்ற தாக்குலுக்கு எதிராக நாங்கள் எதிர் நடவடிக்கைகளை எடுக்கின்ற சில சம்பவங்கள் நடப்பது உண்மை.

அதற்காக ஆயுதக்குழுக்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகளால் - அவர்களால் நடத்தப்படுகின்ற சம்பவங்கள் எல்லாவற்றையும் கொண்டு வந்து விடுதலைப் புலிகள் மீது சுமத்தி, விடுதலைப் புலிகள் மீது அதிருப்தியை ஏற்படுத்துவது, இந்தச் சமாதான முன்னெடுப்புக்களை தொடர்வதற்கு தடங்கலாக இருக்கும்.

ஊர்காவற் படையினரை விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டிருந்தால், அவர்கள் பற்றிய வேண்டுதலை நாங்கள் ஏற்றுக் கொள்ளலாம். யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி ஆயுதங்களுடன் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஊடுருவிய நிலையில்தான் எங்களது காவல்துறையினரால் அவர்கள் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர்.

அந்தவகையில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற் கொண்டுதான் அதற்கான தீர்மானத்தை எடுக்கலாம். நாங்கள் ஒரு ஆலோசனையைக் கொடுத்திருக்கிறோம். அரசாங்கத்தின் சமாதான செயலகமும் எமது போராளிகளை விடுவிப்பதற்கான சட்டரீதியான நடடிக்கைகளை எடுக்கின்றபோது, எங்களுடைய சமாதான செயலகமும் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து, அவர்களை சட்ட ரீதியாக விலக்கி, வெளியில் எடுப்பதற்கான ஒத்துழைப்பை மிகத்தெளிவாக அவர்களிடம் கூறியிருக்கின்றோம்.

ஆனால், கண்காணிப்புக் குழுவால் விடுக்கப்பட்ட அறிக்கை கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக கேட்டறிந்த பின்னர்தான் எங்கள் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவோம். தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கொலைசெய்யப்படுவதானது திட்டமிட்டு விடுதலைப் புலிகள் மீது அவதூறு ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்த நோர்வேப் பிரதி நிதிகள் சுவிஸிலிருந்து அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் புறப்பட்டுச் சென்றனர்.

சுவிற்சர்லாந்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியலமைப்பு விவகார சட்டவல்லுநர் குழு, மனித உரிமைக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழுவினரையும் சந்தித்து கலந்துரையாடிய நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் இந்தியாவிற்கும், சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அமெரிக்காவுக்கும் புறப்பட்டுச்சென்றனர்.

YOGI BEAUTY PARLOUR
(Academy of Beauty Culture & Hair Dressing)
YOGI HOME SCIENCE ACADEMY

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் இம்மாதம் 9 ஆம் 10 ஆம் திகதிகள் (சனி ஞாயிறு) முதல் ஆரம்பமாகவுள்ளன.

- கேக் ஐசிங் மேலைத்தேய ஐசிங் அலங்காரம் மாச் சீனி மலர் அலங்காரம் (Fondant Structures & Sugar Flowers)
- முக ஒப்பனை தலை அலங்காரங்கள் மணப்பெண் அலங்காரம் (Facial Classes)
- அழகுக் கலையும் மூலிகை சிகிச்சை முறைகளும் (Beauty Culture and herbal Therapy)

இதில் பாடக் குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

T.P: 021 222 2796

75 அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.